12 பக்கங்கள் விலை 50 காசு

# நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 25—6—1978 | இதழ் 42

# அஞ்சாமல்-கண் துஞ்சாமல் ஆற்றிடுக கடமை!

## கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,


மதுரையில் கூடி, என்னையும் பேராசிரியர் அவர்களையும் நண்பர் சாதிக் பாட்சாவையும் மீண்டும் இதே பொறுப்புக்களில் இருந்து தொடர்ந்து தொண்டாற்றுங்கள் என்று கூறி விட்டாய்!

நமது கழகத்தின் பொதுக் குழுக்களிலே மிகப் பெரியது இப்போது அமைந்துள்ள பொதுக் குழு! ஒரு தடவை பொதுக்குழுவைக் கூட்டுவதென்றால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் மாவட்டக் கழகமோ, அல்லது நகரக் கழகமோ ஆயிரக் கணக்கான ரூபாய் செலவிடத் தயாராக இருக்க வேண்டும், இதை எண்ணிப் பார்த்துத்தான் ஏற்கனவே நியமனத்தின் வாயிலாக அமைக்கப்பட்டு வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தலைமைச் செயற்குழு அமைய வேண்டுமென்று சட்ட திட்டக் குழு கருத்தறிவித்து, அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவ்வாறே இப்போது தலைமைச் செயற்குழுவுக்கு ஏறத்தாழ நூறு பேர் அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப் பட்ட பொதுக்குழுவுக்கும் செயற் குழுவுக்கும் இன்னும் சிலரைப் பொதுச் செயலாளர், கழகச் சட்ட திட்டப்படி முறையாக நியமிக்கும் உரிமை பெற்றுள்ளார். அடிக்கடி கலந்து பேசி ஆக்கப்பணிகளை நிறைவேற்றத் தலைமை நிர்வாகக் குழு ஒன்றும் திருத்தப்பட்ட சட்டதிட்டத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தக் குழுவில், தலைவர். பொதுச் செயலாளர், பொருளாளர், பொதுச் செயலாளரால் நியமிக்கப்படும் துணைப்பொதுச் செயலாளர் — தலைமைக் கழகச் செயலாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள் இடம் பெறுகிறார்கள்.

கட்சியின் பணிகள் விரைவாகவும் பரவலாகவும் ஜனநாயக முறையிலும் செம்மையாக நடைபெற நமது அமைப்பில் இத்தகைய சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எழுநூறு பேர் அளவுக்கு உள்ள பொதுக்குழுதான் எல்லா அதிகாரங்களும் படைத்தது என்றாலும். அந்தக் குழு தலைமைச் செயற்குழுவுக்கும் - தலைமை நிர்வாகக் குழுவுக்கும் முறையான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து கழகத்தின் அன்றாட அலுவல்களும் - நிலைமைக்கேற்பஎடுக்கும் முடிவுகளும் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கழகம் வலிவும் பொலிவும் பெற வழிவகை கண்டுள்ளது.

பொதுக்குழு உறுப்பினர்கள், தணிக்கைக் குழுவுக்கு மூன்று பேரையும், ஆட்சி மன்றக் குழுவுக்கு ஆறு பேரையும் தேர்ந்தெடுக்கக் காலை 10 மணி முதல் மாலை நாலரை மணி வரையில் வாக்களிக்கும் பணியில் ஈடுபட்டார்கள் என்றால் நமது கழகம் கட்டிக் காக்கும் ஜனநாயக மரபுக்கு அது, தலையாய எடுத்துக்காட்டல்லவா?



அருமை நண்பர் ஆசைத்தம்பி அவர்களால் ஒரு இடத்தில் தொடர்ந்து நீண்ட நேரம் உட்கார்ந்திருகக முடியாது. அவர், அன்று ஆணையாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டு காலை முதல் மாலை முடிய அந்தப் பணியைத் தொய்வின்றி நிறைவேற்றிக் கொடுத்தார். எளிமையும், அதே நேரத்தில் எழுச்சியும் பொங்கிட மதுரை நகர், மதுரை மாவட்டங்களின் செயல் வீரர்கள் பொதுக் குழுக் கூட்டமும் அதனையொட்டிய சிறப்புக் கூட்டமும் நடைபெறத்தங்கள் பேருழைப்பை நல்கியிருக்கிறார்கள்.

மாலையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர். இலட்சக் கணக்கானோர் என்றுதான் கூறவேண்டும். ஆனால் நுழைவுக் கட்டணத்தை முறையாகச் செலுத்தி வந்தவர்களின் எண்ணிக்கை குறைவுதான். ஒரு ரூபாய் நுழைவுக் கட்டணம் செலுத்தி வந்தவர்களின் வாயிலாக அன்றைய சிறப்புக் கூட்ட வசூல் இருபத்து இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்! இது சாதாரணத் தொகையல்ல! பெருந் தொகைதான்! ஆனால் சிறப்புக் கூட்டம் திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற காரணத்தால் சுற்றுச் சுவர்களையும் தட்டி அடைப்புக்களையும் தாண்டிக்கொண்டும் தள்ளிக் கொண்டும் பல்லாயிரக் கணக்கானோர் நுழைந்து விட்டார்கள்! பரவாயில்லை; பணத்திற்குப் பணமும்கிடைத்தது- ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய மனநிறைவும் ஏற்பட்டது. இனி நடைபெறும் சிறப்புக் கூட்டங்களில் நமது செயல் வீரர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் மற்றொரு சிறப்பு - நமது பழம்பெரும் தோழமைக் கட்சிகளான முஸ்லீம்லீக்கும், பார்வர்டு பிளாக் கட்சியும்இரண்டாண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு நம்முடன் உறவைப்புதுப்பித்துக்கொண்டுஉணர்வு பூர்வமாக உடன்பாடு கொண்டதுதான்!

அன்பு நண்பர் சமத் அவர்களும், அருமை நண்பர் ஆண்டித் தேவர் அவர்களும் ஆற்றிய உரை இதயத்திற்கு இதமாக இருந்தது! அடிபட்டுப் புண்ணாகியிருக்கிற நெஞ்சமல்லவா? அந்த நெஞ்சுக்கு ஒத்தடம் கொடுத்ததுபோல் இருந்தது நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏற்பட்ட அந்தச் சந்திப்பு!

பொதுக்குழுவில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களைத் தனக்கேயுரிய அழகு தமிழில் மிடுக்கு நடையில் தெளிவும் ஒளியும் கிடைக்கத்தக்கவகையில் விளக்கி விரிவுரையாற்றினார் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர்!

[12-ம் பக்கம் பார்க்க]

## இது என் அன்பு வேண்டுகோள்!

# குமரியில் ஏற்றிய தீபம்

# இமயத்தில் ஒளிவீசுகிறது

★★★★★★★★★★★

சா. கணேசன்

★★★★★★★★★★★

நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த தலைவர்கள் நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் தலையாய பிரச்சினையாகக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாயிரம் ஆண்டு வரலாறு ஒன்றுபட்ட இந்தியாவைக் கண்டதில்லை. இதிகாச புராணங்களிலோ மத இலக்கியங்களிலோ கற்பனையாக 'பாரதவர்ஷம்' இருந்திருக்கலாம்; ஆனால் உண்மையில் 'பாரத வர்ஷம்' என்ற நாடு இருந்ததில்லை.

இமயம் முதல் குமரி வரை என்பதெல்லாம் புராணகால 'இந்தியா'வின் புனித யாத்திரைக்கு எல்லைக் கோடுகளாக அமைந்திருக்கலாம். ஆனால் அசோகன் காலத்திலோ, சமுத்திரக்குப்தன் காலத்திலோ, அக்பர் காலத்திலோ இந்தியா ஒரே நாடாக இருந்ததாக வரலாறு இல்லை.

குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டியார் கூறியதுபோல் ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா என்ற நாடு ஆக்கப்பட்டது. நம்மை அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயர்களே எளிதாக ஆளுவதற்கு ஏற்றது என்று எண்ணி இந்தியாவை ஐக்கியப்படுத்தி ஆண்டு வந்தார்கள். காரணம் அவர்கள் அந்நியர்கள். இதுவே வரலாற்று உண்மையுங்கூட.

1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்றபோதே இரண்டாகப் பிறந்தது; ஒன்று இந்தியா; மற்றொன்று பாகிஸ்தான். மீண்டும் ஒரு பிரிவினை எண்ணிப் பார்க்கக் கூடாததுதான். ஆனால் அதற்கான காரணங்கள் நாட்டில் நிலைபெற்று இருக்குமானால் அவைகளைத் துடைத்திடத் துரிதமான பணிகள் மேற்கொண்டாக வேண்டும்.

இந்தியக் குடியரசு ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் ஆட்சி அமைப்பை உடையது. ஒளிவு மறைவு இன்றிக் கூற வேண்டுமெனில் அது கூட்டாட்சித் தத்துவத்திற்குரிய கூறுகள் இல்லாதது.

நாட்டின் ஐக்கியத்திற்கு உரம் ஊட்டுகின்ற வகையில் அரசியல் சட்டம் உறுதி செய்ய முயலுகிறது. இந்தியக் குடியரசு என்பதை விரிவாக்கம் செய்கின்ற நேரத்தில் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் கூட்டாட்சி என்ற சொல்லைவிட ஒற்றையாட்சி என்ற சொல்லையே விரும்பினார்கள்.

அரசியல் சட்ட அறிஞர் ஐவர் ஜென்னிங்ஸ் "இந்தியா பலப்படுத்தப்பட்ட மத்திய ஆட்சியின் தன்மையோடு உள்ள கூட்டாட்சி நாடாகும்" என்று கூறுகிறார். மேலும் அவர் "மதத்தின் பேரால, சாதியின் பேரால் பாரபட்சம் கூடாது என்று கூறுகிற இந்திய அரசியல் சட்டம் மொழியின் பேராலும் பாரபட்சம் இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்க வேண்டும்" என்கிறார்.

1950 ஆம் ஆண்டில் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், அரசியல் பண்டிதர்களுடைய கருத்துக்கள் எப்படியிருப்பினும், இந்தியா ஒன்றுபட்ட மக்கட்தொகையாக விளங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் நிறைய இருந்தன. அதற்குக் காரணம் மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கட்சியே ஆண்டு வந்ததேயாகும்.

இந்த இடைக்காலத்தில், இந்தியாவின் தலைவிதி காங்கிரசுக் கட்சியின் மேலிடத்தின் கையிலே இருந்தது. மேலிடம் என்பது வேறு யாருமல்ல அன்றைய, தலைமை அமைச்சராக விளங்கிய பண்டித ஜவகர்லால் நேருவேயாவார்.

மத்திய அமைப்பின் ஆணையைவிட பண்டித நேருவின் ஆணையே தெறகு முதல் வடக்குவரை திரண்டு வருறது.

அந்தக் காலத்தில் சக்தி வாய்ந்த முதலமைச்சர்களாக விளங்கி வந்த கோவிந்தவல்லப பந்த், டாக்டர் பி. சிராய் போன்றவர்களைகூட நேருவை எதிர்த்துக் கேள்வி கேட்கத் துணியவில்லை.

மத்திய மாநில உறவு முறை தேக்க நிலையில் இருந்தது. அரசியல் சட்டம் அமைதியோடு செயல்பட்டதாகத் தோற்றமளித்தது. ஆனால் நிலைமை அவ்வாறே நீடித்திருக்கவில்லை. 1957-ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆட்சி அமைக்கப்பட்டது; அதிலிருந்து பிரச்சினையும் உருவாகியது. அருவருப்பான சூழ்நிலையைத் தடுத்து நிறுத்திடும் அளவுக்கு அரசியல் சட்டம் வளைந்து கொடுக்குமா? அதன் மூலமாக மத்திய மாநில உறவுச் சூட்டினைத் தணிக்க முடியுமா? என்று எண்ணி, விழிப்புற்ற மக்கள் வியந்துபோயினர்!

ஆனால் அரசியல் சட்டம் நீண்ட காலத்துக்கு முன்னாலேயே மத்திய அரசுக்கு வளைந்துகொடுக்கத் தொடங்கி விட்டது.

ஒரே கட்சியின் ஆட்சிதான் இந்தியாவில் இருக்கவேண்டும் என்று சர்வாதிகாரப்போக்குக் கொண்ட இந்திராகாந்தி அன்றே எண்ணினார். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் வாக்களித்து, தேர்ந்தெடுத்து நம்பூதிரிபாட் தலைமையில் அமைக்கப்பட்ட ஆட்சியை அதிகார வெறிபிடித்த இந்திரா காந்தி கலைத்திடப் பரிந்துரை செய்தார். 'பிரியதரிசினி'யின் பரிந்துரையால் பண்டித நேரு கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கலைத்துவிட்டார்.

அரசியல் சட்டத்தின் மூலமாக மத்திய ஆட்சியைப் பலப்படுத்த நடத்தப்பட்ட ஒத்திகையாகவே அரசியல் பார்வையாளர்கள் அன்றையத் தினம் அதனைக் கருதினர்.

மத்திய அரசு அனைத்து அதிகாரங்களையும் தன்னிடமே குவித்துக் கொண்டதால் மாநிலங்களால் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. அதற்கான அதிகாரமும் அவைகளிடம் இல்லை;

இவற்றிற்கு நிரந்தரப் பரிகாரம் கண்டிட அறிஞர் அண்ணா மாநில சுயாட்சியே நல்ல மாமருந்து என்று கண்டார். அதனை மக்கள் மத்தியில் வைத்தார். அதற்கு ஆதரவு தேட, மக்களின் இதயக் கழனியில் மாநில சுயாட்சி என்ற விதையைத் தூவினார்.

பேரறிஞர் அண்ணாவிற்குப் பின் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் மக்களின் இதய கழனியைப் பதப்படுத்தினார் பாதுகாத்தார்; தூவப்பட்ட விதை முளைத்து நாற்றாகியிருப்பதைக் கண்டு களிப்படைகிறார். நாற்றினைப் பிடுங்கி நடுகிறார், களையெடுக்கிறார், கட்டிக் காத்து வருகிறார்; பயிர் செழித்து வளருவதைக் கண்டு சிலர் பொறுமைப்படுவதும், பலர் இன்முகம் காட்டி பயிருக்குத் தண்ணீர் பாய்ச்ச முன் வருவதைக் கண்டும் வரவேற்கிறார்; அவர்களுக்கெல்லாம் வாழ்த்தும் கூறுகிறார்!

தாம் முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் அவர்கள் மாநிலசுயாட்சி தத்துவத்திற்கு உருவம் கொடுக்க, சட்ட மேதைகளான பி. வி. ராசமன்னார், சந்திரா ரெட்டியார், கல்வி மேதை இலட்சுமணசாமி முதலியார் ஆகியோரைக் கொண்ட குழுவை நியமித்தார்.

அந்தக் குழு மாநில சுயாட்சி பற்றிய தனது பரிந்துரையை அரசுக்கு அளித்தது. மத்திய அரசு செய்ய வேண்டிய பணி இது, ஆனால் மாநில ஆட்சியே இந்த மாபெரும் பணியினைச் செய்து முடித்தது மக்களின் மதிப்பைப் பெற்றது. மத்திய அரசின் சுமையை இறக்கியது.

இந்தியாவின் அரசியல் வல்லுநர்கள் இந்தப் பரிந்துரையை வரவேற்றனர். அதுமட்டுமின்றி ஆய்வும் செய்தனர்; இந்த அரசியல் சூழ்நிலையின் பின்னணியை ஒட்டியே நாட்டில் மாநில சுயாட்சி பற்றிய கருத்தரங்குகள் மாநாடுகள் தி. மு. கழகத்தால் நடத்தப்பட்டன.

1969 இல் மேற்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணியின் ஆட்சி அமைக்கப்பட்டது. அஜாய் முகர்ஜி முதல்வராகவும், ஜோதிபாசு துணை முதல்வராகவும் பொறுப்புக்கு வந்தனர். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நடைமுறை நிர்வாகத்தின்போது மோதல் தொடங்கியது. தொடர்ந்தது. அதன் விளைவாக அடுத்த ஆண்டே அமைச்சரவை அகற்றப்பட்டது. சட்டப்பேரவை கலைக்கப்பட்டது.

மத்தியில் அப்போது ஆட்சியிலே இருந்த காங்கிரசுக் கட்சி அரசியல் சட்டத்தின் துணையோடு நிலத் திமிங்கிலங்களுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் ஆலவட்டம் சுழற்றிக் கொண்டிருந்தது. மத்தியில் ஆட்சியிலே இருந்த காங்கிரஸ் கட்சியின் இந்தப் போக்கைப் பின்பற்றி நிர்வாக இயந்திரத்தை இயக்கவில்லை என்பதுதான் ஜோதிபாசு ஆட்சியைக் கவிழ்த்ததற்குக் காரணமாகும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஜனதா கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் நட்புக் கட்சிகளாக நடைபோடுகின்றன. மாநிலசுயாட்சி பற்றிய பிரச்சினையை ஆய்வு செய்தே ஆகவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சி மார் தட்டி குரல் எழுப்பியுள்ளது. இந்தப் பிரச்சினையில் முன்னோடியாக முனைந்து நின்றவர் முதல்வரான காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா ஆவார். அதுமட்டுமன்று கலைஞரால் உருவாக்கப்பட்ட மாநில சுயாட்சி பற்றிய முழு அறிக்கையை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்கு அதை பரிந்துரையும் செய்தவர்.

இந்தியாவிலேயே அரசியல் சட்டத்தின் 370வது பிரிவின்படி தனி அந்தஸ்தைப்பெற்று திகழ்ந்து வருவதும் காஷ்மீரம் அல்லவா?

காஷ்மீரம் பெற்றுள்ள அதிகாரங்கள் மற்ற மாநிலங்களும் பெறும் நிலையை இன்றைய அரசியல் சூழ்நிலையில் அடைய முடியாது என்றாலும் மாநில சுயாட்சியை யாவது மற்ற மாநிலங்கள் அடைய வேண்டும் என்று ஷேக் அப்துல்லா எண்ணினார்.

பஞ்சாப் மாநிலத்தை ஆளும் அகாலிதளத்தின் முதல்வர் பிரகாஷ் சிங் பாதலும் பரிந்துரை செய்ய முன்வந்திருக்கிறார்.

குஜராத், பீகார் ஆகிய மாநிலங்களில் ஜனதா கட்சியே ஆட்சியில் இருந்துங்கூட மாநில சுயாட்சிக்குத் தங்களுடைய ஆதரவைத் தந்திடத் தவறவில்லை.

மத்தியிலே உள்ள ஆட்சியாளர்கள் இது விஷயத்தில் மௌனம் சாதித்தாலுங்கூட குடியரசுத் தலைவரான சஞ்சீவ ரெட்டியார் மாநில சுயாட்சிக் கீதத்தைச் சுருதிபேதமின்றி இசைக்கத் தொடங்கி விட்டார்.

ஆந்திர மாநிலமும், மராட்டியமும் இந்திரா கட்சியின் ஆளுகையில் இருந்து வருகின்றன. சர்வாதிகாரக் காற்றைச் சுவாசிக்கின்ற இந்திரா இதில் மாறுபட்டு இருந்தாலும் துணை முதல்வர் திரிபுடேவும் முதல்வர் சென்னா ரெட்டியும் அவரிடம் வேறுபட்டே மாநில சுயாட்சிக்கு ஆதரவை நல்கி வருகின்றனர்.

மாநில சுயாட்சிக்கு முதல் குரல்கொடுத்தது தி. மு. கழகமே என்று தமிழகத்திற்கு வந்தபோது மேற்குவங்க முதல்வர் ஜோதிபாசு கூறினார்.

அரசியல் சூறாவளி புயலாக விசுவரூபம் எடுத்தாலும் அதிகாரங்களைக் குவித்துவைத்துக் கொள்ளும் கொள்கையினர் உடும்புப்பிடியோடு உட்கார்ந்திருந்தாலும் சந்தர்ப்ப அரசியல்வாதிகள் தங்கள் பல்லவிகளை மாற்றிக் கொண்டாலும், மாநில சுயாட்சி என்பது தவிர்க்க முடியாத தத்துவமாகவே இன்றைய இந்திய அரசியல் வரலாற்றில் இருந்து வருகிறது.

சுயாட்சித் தீபத்தை ஏற்றி வைத்த கைகள் இப்போது இல்லையென்றாலும் அதை ஏந்தி நிற்கும் கைகளுக்கு அதை அணையாமல் காக்கும் ஆற்றல் உண்டு.

ஆம், அதை ஏற்றி வைத்தவர் அண்ணா!

அதை ஏந்தி நிற்பவர் கலைஞர்!

அந்தத் தீபம் ஒருநாள் குன்றின் மேலிட்ட விளக்காக குவலயத்திற்கு ஒளி பாய்ச்சத்தான் போகிறது. இன்று குமரியில் ஏற்றி வைத்த தீபம் இமயத்தில் ஒளி வீசுகிறது.

## அமெரிக்காவின் அரசியல் விளையாட்டு!

சோவியத்திற்கும் சீனாவுக்கும் இடையே எல்லைத் தகராறின் காரணமாக வளர்ந்து வரும் பகைமையைப் பயன் படுத்திக் கொண்டு குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகரான 'சிபிக்கின் யூ பிரேசின்ஸ்கி' அண்மையில் சீனாவுக்குச் சென்று முக்கியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அப்போது சோவியத் தலைவர்கள் பற்றி அவரும் சீனத்தலைவர்களும் 'கேலி' பேசி மகிழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

# வீரத்தை வீழ்த்திய துரோகத்தின் வரலாறு!

ஜூலியஸ் சீசர் வீரன்—மாவீரன். உலக வரலாற்றில் ஒளிமிகு இடம் பெற்றவன். வீரத்தால் வெற்றிகளைக் குவித்தவன்! வெற்றிகளால் ரோமானியப்பேரரசைவிரிவாக்கியவன் அப்பேரரசின் பெயர் பரப்பியவன்.

அவன் ஏசு பிறப்பதற்கு முன்னரே பிறந்து மறைந்தவன். காலம் எவ்வளவு கடந்து விட்டது! ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் ஓடிமறைந்து விட்டன காலம்தான் மாறியுள்ளது கதாபாத்திரங்கள் தான் மாறியுள்ளன. ஆனால் கதை? அது மட்டும் மாறவில்லை. அதன் கருப்பொருள் மாறவில்லை. இன்றும் 'சீசர்களின் கதைகள் நிகழ்ந்து கொண்டுதானே இருக்கின்றன' அக்கதை நிகழ்கின்றபோதெல்லாம் சீசரின் வரலாறு நம் நினைவில் நிழலாடிக் கொண்டுதானே இருக்கிறது!

சீசரை எதிர்த்திட எவரும் துணிந்ததில்லை. அவன் சினந்து நோக்கினால் பகைவர்கள் பணிந்து குனிவார்கள். அவன் சென்ற இடங்களில் எல்லாம் வெற்றிக் கொடி நாட்டினான். அவன் சென்றான்-கண்டான்-வென்றான். அவன் வெற்றிகள் ரோமானியப் பேரரசின் புகழை வான்முட்ட வளர்க்கிறது. அத்துடன் அவன் புகழும் வளர்கிறது. வளரும் அவன் புகழ் பொறாமைக்காரர்களின் வயிற்றெரிச்சலையும் வளர்க்கிறது.

மக்களின் உள்ளங்களில் அவன் இடம் பெறுகிறான். அவர் தம் இல்லங்களில் அவன் திருவுருவச் சித்திரங்கள் தீட்டப்படுகின்றன. எங்கும் அவனைப் பற்றியே பேச்சு! எப்போதும் அவனைப் பற்றியே பேச்சு அவன் வெற்றி வவர்கிறது! மக்கள் அவன் மீது கொண்ட அன்பும் வளர்கிறது. அது பக்தியாகவே மாறுகிறது அவனை மகேசனின் மறு அவதாரமாகவே மக்கள் கருதி வணங்கும் அளவிற்கு வளர்கிறது.

அவன் பிற நாடுகளை வென்று திரும்புகிறபோது ரோமானியர்கள் மலர் தூவி அவனை வரவேற்கின்றனர். பண்ணிசைத்து வரவேற்கின்றனர். மாலை அணிவித்துப் பாராட்டுகின்றனர். ஆடிப் பாடிவரவேற்கின்றனர். அவன் வெற்றி பெற்றுத் திரும்பும் போதெல்லாம் ரோமாபுரி விழாக்கோலம் கொள்கிறது. மக்கள் எழுப்பும்வாழ்த்தொலி விண்ணையும் மண்ணையும் அதிரச் செய்கிறது. அத்தோடு அவனது உள்நாட்டுப் பகைவர்களின் உள்ளங்களையும் அதிரச் செய்கிறது. பொறாமைத்தீயைக்கொழுந்து விட்டு எரியச் செய்கிறது. ஆனால் அப் பொறாமைக்காரர்களுக்கோ அச்சம் — அவனை நேருக்கு நேர் எதிர்க்கும் நெஞ்சத் துணிவில்லை — அவர்களுக்கு நேர்மைத் திறனில்லை. தோள்வலியும் வாள் வலியும் அற்ற அப்பொறாமைக்காரர்கள் அவனை வீழ்த்திட சதித்திட்டம் தீட்டுகின்றனர். அச்சதிகாரர்களின் தலைவன் காஷியஸ்.

காஷியஸ் மெலிந்த உடலும் பசிப் பார்வையும் உடையவன். பொறாமைத் தீ அவன் உள்ளத்தையும் உடலையும் உருக்கி மெலியச் செய்கின்றது. உடல் வலிமையும் உள்ள வலிமையும் அற்ற காஷியஸ் மூளை வலிமையுடையவன்; மூளை முழுவதும் நஞ்சு. அம் மூளையில் முகிழ்க்கும் சிந்தனை முழுதும் நஞ்சு சூழ்ச்சியால் மட்டுமே சீசரை வீழ்த்த முடியும் என்ற முடிவுக்கு வருகிறான் அச் சூதுக்காரன். ஆனாலும் அச்சம் அவனை ஆட்டிப் படைக்கிறது. மக்கள் அவன் மீது கொண்டுள்ள பக்தியை நினைக்கிறான்; பயந்து நடுங்குகிறான். அவர்களின் கோபத்தீயில் தான் எரிந்து சாம்பலாகி விடுவோமோ என்று எண்ணி நடுங்குகிறான்.

மக்களின் நன்மதிப்பைப் பெற்றவன் ஒருவனின் உதவி இருந்தால் தவிர சீசரை சூழ்ச்சியால் வீழ்த்துவது ஆபத்து என்று உணர்கிறான். மனிதர்களை எடை போடுவதில் திறமை மிக்கவன் காஷியஸ். அவன்பார்வையில் புருட்டஸ் பளிச்சென்று படுகிறான். புருட்டஸ் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நல்லவன். ஆம் அவன் நல்லவனே தவிர வல்லவன் இல்லை. அவன் சீசரின் நண்பன்; ஆனால் நண்பனைவிட நாட்டை அதிகம் நேசிப்பவன். அவன் இலட்சியவாதி, ஆனால் எதார்த்த வாதியில்லை. காஷியசின் சூழ்ச்சிக்கு ஏற்ற ஏமாவிபுருட்டஸ் "சீசர் சர்வாதிகாரி ஆகப்போகிறான். சீசர் முடி புனைந்து மன்னனாகப் போகிறான். சீசர் ரோமானியக்குடியரசைக் குழி தோண்டிப் புதைக்கப்போகிறான். புருட்டஸ் போன்றவர்கள் எல்லாம் உரிமை இழந்து அடிமைகளாகப்போகிறார்கள்" என்று புருட்டசை நம்பச் செய்துவிடுகிறான் சூழ்ச்சியில் வல்ல காஷியஸ்; காஷியசை புருட்டஸ் நம்பிவிடுகிறான் சீசர்மீது மக்கள் கொண்டிருந்த கண்மூடி பக்தி அதற்குத் துணை புரிகிறது. நாட்டின் நடப்பு அதற்கு உதவி செய்கிறது. காஷியஸ் தன் பொறாமையை கொள்கைப் போர்வையால் மூடி மறைத்து விடுகிறான். தன் சூழ்ச்சியை இலட்சியத் திரையால் மறைத்துவிடுகிறான் புருட்டஸ், காஷியஸ் விரித்த வலையில் மாட்டிக் கொள்கிறான். குடியரசைக் காப்பாற்ற வேண்டுமானால் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் உரிமைகளுக்கு அரண் செய்ய வேண்டுமானால் சீசரைத் தீர்த்துக் கட்டுவதைத் தவிர வேறுவழியில்லை என்று புருட்டஸ் முடிவுக்கு வருகிறான். நண்பனைவிட நாடே பெரிதென்று தனக்குள் சமாதானம் செய்து கொள்கிறான். நண்பனைவிட சுதந்திரமே பெரிதென்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொள்கிறான்.



புருட்டஸ் காஷியஸ் வலையில் வீழ்ந்தவுடன் திட்டம் விரைந்து செயல் உருவம் பெறத் தொடங்குகிறது. மறுநாள் சீசர் செனட் சபையில் அமர்ந்திருக்கும்போது அவனைச் சூழ்ந்து நின்று தாக்கிக் கொல்வதென்று முடிவெடுக்கிறார்கள் சூழ்ச்சிக்காரர்கள். அவனை எப்படியும் செனட் சபைக்கு வரச் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் காஷியஸ் செய்கிறான் சீசரின் மனைவிஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போகிறது என்று உணர்கிறாள் எனவே செனட்டிற்கு அன்றுசொல்ல வேண்டாம் என்று கெஞ்சுகிறாள். ஆனால் காஷியசின் கையாள் அவன் செருக்கை தூண்டுகிறான். சீசரின் பலவீனம் அவன் செருக்குத்தான். ஒருவேளை பெருமிதம் என்று அதற்குச் சமாதானம் சொல்லக்கூடும். கூற்றையும் வெல்லும் ஆற்றல் மறவன் சீசரா அஞ்சுவது' என்று காஷியஸ் கையாள் கூறவும். சீசர் மனைவியின் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டுப் புறப்படுகிறான். புறப்படுவதற்கு முன் மனைவிக்கு மறுமொழி கூறுகிறான்: கோழை பலமுறை சாகிறான்; ஆனால் வீரன் ஒரு முறை தான் சாவைச் சுவைக்கிறான் என்று கூறிவிட்டு, செனட் சபைக்குச் செல்கிறான்.

சீசர் சபையில் தன்உயர்ந்த இருக்கையில் அமர்கிறான். விவாதத்தை ஏதோ ஒரு சாக்கில் எழுப்புகிறார்கள். திடீர் என்று சூழ்ச்சிக்காரர்கள் சீசரைச் சூழ்ந்து கொள்கிறார்கள். தத்தம் வாளாலே அவனை வெட்டுகிறார்கள். குத்துகிறார்கள். குருதி பீறிட்டுப் பாய்கிறது. அவையினர் திகைத்துச் செயலிழக்கின்றனர். சீசர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயல்கிறான். ஒருவேளை அவன் அந்த முயற்சியில் வெற்றி கூடப் பெற்றிருப்பான். ஆனால், அப்போது நண்பன் நல்லவன் என்று சீசர் நம்பிய புருட்டஸ் அவனது வாளால் சீசரைத் தாக்குகிறான். தற்காப்பு முயற்சியிலே ஈடுபட்ட சீசர் இதைப் பார்த்ததும் செயல் இழக்கிறான். 'நீயுமா புருட்டஸ்?' என்று கூறிக்கொண்டே வீழ்கிறான். நண்பன் புருட்டசே வாளால் தன்னைத் தாக்குகிறான் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை சீசரால். காஸ்காவும் காஷியசும் தாக்கியபோது தற்காத்துக்கொள்ள முயன்ற சீசர் புருட்டஸ்தாக்கியபோது தடுக்கவே முயற்சிக்கவில்லை. அவர்கள்தாக்குதலைவிட புருட்டசின் தாக்குதலைத்தான்சீசரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பகைவர்கள் எல்லாம் சீசரின் உடலில் தத்தம் வாளைப் பாய்ச்சினார்கள் வெட்டினார்கள் ஆனால் அவை அனைத்தையும் விட புருட்டஸ் தன் வாளைப் பாய்ச்சியதுதான் கொடுமையிலும் கொடுமை!

மாவீரன் சீசர் சூழ்ச்சிக்காரர்களால் சூழ்ந்தியினரால் மட்டுமே கொல்லப்படவில்லை, நண்பனின் துரோகத்தாலும் வீழ்த்தப்பட்டான்.

சீசரின் வரலாறு துரோகத்தால் வீழ்ந்த வீரத்தைப்பற்றியது. அது சீசரோடு முடிந்துவிடவில்லை, தொடர்கிறது; வீரனாக மட்டும் இருந்த சீசர் துரோகத்திற்குப் பலியானான். ஆனால் விவேகியாகவும் இருக்கும் வீரனிடம் துரோகம் தோற்கவே செய்யும். அந்தப் புதிய வரலாறு தான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

---

★★★★★-★★★★★★

## விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு நமது 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

காஞ்சிபுரம்
திருப்புவனம்
புலவன்காடு
பெரம்பலூர்
ஆத்தூர் (மதுரை மாவட்டம்)
விருகமபாக்கம் (சென்னை)
திருவாரூர்
ஸ்ரீரங்கம்
நீடாமங்கலம் (தஞ்சை)
புதுக்கோட்டை

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம், சென்னை-600018

★★★★★★★-★★★★

---

## பதினெட்டு ஆண்டுகட்குப் பிறகு பஞ்சாயத்துத் தேர்தல்கள்!

ஏறத்தாழ பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கு வங்கத்தில் கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற்றன. 56,000 -இடங்களுக்கானதேர்தல்களில்பெரும்பாலானவற்றைப் பெற்று முதலிடத்தை வகித்துள்ளது மார்க்ஸிஸ்ட் (இடதுசாரி) கம்யூனிஸ்ட் கட்சி. இரத்தம் சிந்தாமல் மேற்கு வங்கத்தில் தேர்தல்கள் நடைபெறுவதில்லை என்ற உண்மை யாவரும் அறிந்ததே. ஆனால் இம்முறை தேர்தல்கள் பொதுவாக அமைதியாகவே நடந்துள்ளன என்றபோதும்—

சில இடங்களில் 'அசம்பாவிதங்கள்' நடைபெறத்தான் செய்தன; ஜனதா கட்சியினரும், மார்க்ஸிஸ்ட் ஆதரவாளர்களும் சில இடங்களில் 'மோதி'க் கொண்டனர்.

'மிட்நாப்பூரில்' பதின்மூன்று 'இடங்களில் தேர்தல்கள் ரத்து செய்யப்பட்டன; ஆயிரத்து ஐநூறு பேர்கள் 'கலகம்' விளைவித்ததற்காகக் கைது செய்யப்பட்டார்கள். சில இடங்களில் வாக்களிக்க வந்தவர்கள் 'இந்தியர்கள் அல்லர்' என்று கூறி சிலரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

மேற்கு வங்கத்தின் அரசியல் அரங்கில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கும் இ. காங்கிரசுக்கு — அதாவது இந்திரா காங்கிரசுக்கு—பஞ்சாயத்துத் தேர்தல்களில் பலத்த அடி கிடைத்துள்ளது.

# மதுரைப் பொதுக்குழுத் தீர்மானங்கள்!

**இம் மாதம் (18—6—78) மதுரையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:**

## இந்தித் திணிப்பிற்குக் கடும் எதிர்ப்பு!

இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று கூறிக்கொண்டிருக்கும்போதே "நிலைமைகள் அப்படியே ஸ்திரமாக இருக்க முடியாது. மத்திய அரசில் இந்தி ஆட்சிமொழி உபயோகம் அதிகரித்துத்தான் தீரும்" என்று அண்மையில் பிரதமர் தெரிவித்திருப்பது இந்திபேசாத மக்களிடையே மிகவும் அச்சத்தை உருவாக்கி, இந்தித் திணிப்பு இல்லை என்ற உறுதி மொழியைக் காற்றில்பறக்கவிடுவதாக இருக்கிறது. மேலும் அதிகாரிகள் இந்தி கற்றுக் கொள்வது அவர்களுக்கே நல்லது என்று பிரதமர் தெரிவித்திருப்பதும் மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் முயற்சிக்கான முழுப் பேச்சாகவே காட்சி அளிக்கிறது மத்திய அரசின் அலுவலகங்களில் மட்டுமின்றி, அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகள். பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் மிக வேகமாக இந்தி திணிக்கப்படுவது ஆட்சியாளர்களின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

உதாரணமாக நிதி இலாகாவின் செலவுத் துறையில் (எக்ஸ்பெண்டிச்சர் டிபார்ட்மெண்ட்(ஒரு பிரிவு முழுக்க முழுக்க இந்தியிலேயே செயல்படுவதாக அந்த இலாகாவின் இந்த ஆண்டு அறிக்கை கூறுகிறது. இருமொழிக்கொள்கைக்குப் பிரியாவிடை கொடுத்துவிட்டு இந்தியை எப்படியும் இந்தியாவின் ஒரே ஆட்சிமொழி ஆக்குவதற்கு எவ்வாறு தீவிர முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதற்கு இதுவும் ஒரு மேற்கொளாகும். உள்துறை அமைச்சகத்தின் உள்ளே ஆட்சிமொழி (டிபார்ட்மெண்ட் ஆப் கமர்ஷியல் லாங்வேஜ்) இந்தி பேசாத அலுவல்களுக்கு கட்டாயமாக இந்தியைத் திணிப்பதற்காக அலுவலர்கள், செயலாளர்கள் ஆகியவர்களோடு ஒரு சக்தி வாய்ந்த இந்தித் திணிப்பு எந்திரமாக வலுவாக்கப்பட்டிருப்பது ஒரு கொடி ஆதிக்கத்தின் திட்டமாகத் தெரிகிறது. இவ்வாறு கண்மூடித்தனமாக திட்டமிட்டு இந்திதிணிக்கப்படுவது இந்தி பேசாத மக்களுக்கு பண்டித நேரு அளித்த வாக்குறுதியைச் செல்லாக் காசாக்குவதோடு, இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தை உருவாக்கும் என்று இந்தப் பொதுக்குழு ஆட்சியாளர்களை எச்சரிப்பதோடு இந்திபேசாத மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் உடனடியாக மத்திய அரசு தன்னுடைய மொழிக்கொள்கையைதிருத்திக் கொண்டு நேருவின் உறுதிமொழிக்கே அரசியல் சட்ட வடிவம் கொடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

## காவிரிப் பிரச்சினை
## தமிழக அரசின் தவறான போக்கு

காவிரி குறித்த 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்துவிட்டதாக அண்மையில் கர்நாடக மாநில முதல்வர் திரு. தேவராஜ் அரஸ் அறிவித்திருப்பதையும் அது குறித்து தமிழக அரசு எந்த மறுப்பும் விடுக்காமல் இருப்பதையும் கண்டு இந்தப் பொதுக்குழு தனது திகைப்பையும், கடும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது. 50 ஆண்டுகளுக்குப் பின் அந்த ஒப்பந்தத்தின் சில பிரிவுகளை மறுபரிசிலனை செய்வதற்குத்தான்வழிஇருக்கிறது என்பதைத்தவிர அதுகாலாவதியாகிவிட்டது என்று சொல்லப்படும் கூற்றை அந்த ஒப்பந்தத்தை ஒருமுறை படித்தவர்கள் யாரும் ஏற்கமாட்டார்கள்.

இந்த நிலையில் ஒவ்வொரு ஆண்டும் தண்ணீருக்காக கர்நாடகத்தை கெஞ்சிக்கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுக் கொண்டிருப்பது குறித்தும், கிருஷ்ணராஜ சாகரில் உள்ள நீர் மட்டம்; பைக்காராவில்பெய்யும் மழை அளவு ஆகியவைபற்றிய தகவல்களை கர்நாடக அரசு முறைப்படி தமிழக அரசுக்குத்தெரிவிக்காமல் மறைப்பதில் வீண்பிடிவாதம் செய்வதுகுறித்தும் இப்பொதுக்குழு தன் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது இதுபற்றி தீர்வுகாண மத்திய அரசும், தமிழக அரசும் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளாதது கண்டு இப்பொதுக்குழு வருந்துகிறது. உடனடியாகதமிழ்நாடுஅரசு தீவிரம்கொண்டு காவிரி டெல்டாப் பகுதி பாலைவனம் ஆகாமல் அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நுகர்ந்து வரும் அனுபவ உரிமைக்குபாதகம் ஏற்படாதவகையில்கர்நாடக அரசு ஒரு உடன்பாட்டிற்கு வரும்படி செய்ய மத்திய அரசை வற்புறுத்தி தமிழ்நாட்டு வேளாண்மைக்குப் பாதுகாப்புக் காணவேண்டும் என்று இப்பொதுக்குழு வற்புறுத்துவதோடு இந்த ஆண்டு குறுவைப் பாசனத்திற்கு விரைவில் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

## கறுப்புச் சட்டத்தை திரும்பப் பெற்றிடுக!

தொழிலாளர்களுடைய ஒரே சக்தியாம் வேலைநிறுத்த உரிமையினைப் பாதிக்கும் வகையிலும், ஜனநாயக இயக்கங்களை அழித்து ஒழிக்கின்றவகையிலும பஸ்போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்த பின்பு தொழிலாளர்கள் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டே அரசினரின் முடிவுகளைத் தொழிலாளர்கள் ஏற்காத நிலையில் அத்தியாவசிய சர்வீஸ் பணியாளர்களுக்குத் தமிழக அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்ததை தி. மு. கழகப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது! இதனை உடனே திரும்பப் பெற வேண்டுமெனவும் தமிழக அரசினை பொதுக்குழு வற்புறுத்துகின்றது இந்நிலை இந்தியப் பெருநாட்டில் அவசரகால நிலை செயல்படுத்தப்பட்டபோது நிலவிய தொழிலாளர் விரோதப் போக்கினைத் தொடர்ந்து தமிழக அரசு பின்பற்றுகிறதோ என்கிற சந்தேகம் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்பதனை இப்பொதுக்குழு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது!

அவசர காலநிலை மறுபடியும் தமிழ்நாட்டில் செயல்படாத வகையில் தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் வர்க்கம் கட்சி மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் அணி திரண்டு நின்று ஒரேகுரலில் இந்தக் கறுப்புச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று குரல் கொடுக்கவேண்டும் என்று தொழிலாளர் வர்க்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

## பொய் வழக்குகளை எதிர்த்து கண்டனப் பொதுக் கூட்டங்கள்

இந்தியத் துணைக் கண்டத்தில்ஜனநாயகப் படுகொலை செய்யப்பட்டு சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த அவசர கால நிலை நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட நேரத்தில் அதை எதிர்த்து மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து ஜனநாயகத்திற்குப் புத்துயிர் கொடுக்க அவசரகால நிலை மிசா சட்டம். சர்வாதிகாரப் போக்கு ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து முதல் குரல் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அதன் காரணமாக அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தையும். தலைவரையும் மற்றும் கழக முன்னணியினரையும் அழித்து ஒழித்துவிட வேண்டும் என்கிற பழிவாங்குகிற நோக்கத்தோடு எந்த விதக் காரணமும் இன்றி நிலையான பெரும்பான்மை பலம் கொண்ட தி.மு.க. அரசைக் கலைத்துவிட்டு, அதை நியாயப்படுத்துவதற்காகக் குப்பைக் கூடையிலே போடப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வது என்கிற போர்வையில் சர்க்காரியா கமிஷனை நியமித்து. அந்தக்கமிஷன்முன் பொய்க் குற்றச் சாட்டுகளை நிரூபிப்பதற்காக அவசர நிலை மிசாச் சட்டம் அதிகாரதுஷ்பிரயோகம் ஆகியவற்றைப் பயன்படுத்தி பொய்ச்சாட்சிகளைத் தயாரிக்க மத்தியபுலனாய்வுப் போலீஸ் குழுவும். மாநில போலீஸ் குழுவும் நியமிக்கப்பட்டதும் அனைவரும் அறிவர்; அப்படி நியமிக்கப்பட்ட போலீஸ் அதிகாரிகள் நெருக்கடி நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு 'மிசா'ச் சட்டத்தைக் காட்டி. சாட்சிகளை அச்சுறுத்தி துன்புறுத்தி; வற்புறுத்தி வாக்குமூலங்களில் கையெழுத்துப் பெற்று நீதிபதி சர்க்காரியா முன்பு தாக்கல் செய்தனர். இந்த இழிசெயலுக்கு அதிகாரிகள் எப்படிப் பயன்படுத்தப்பட்டார்கள் என்பதும், குறிப்பாக மத்திய சிறைச்சாலைக் கண்காணிப்பாளரும், (சூப்பிரண்டெண்ட்) மற்றும் அதிகாரிகள், வார்டர்கள், ஆகியோரும் எவ்வாறு செயல்பட்டு வாக்குமூலங்கள் தயாரிக்கப்பட்டன என்பதை தமிழக உள்துறைச் செயலாளராக இருந்த சுப்பிரமணியம் ஐ. ஏ. எஸ். அவர்கள் கவர்னர் பட்வாரி அவர்களால் நியமிக்கப்பட்ட சிறைச்சாலைக் கொடுமைகள் பற்றி விசாரித்த நீதிபதி இஸ்மாயில் கமிஷனிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார்

முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. ராயப்பா அவர்கள், அவரை அச்சுறுத்தி தயாரிக்கப்பட்ட வாக்குமூலத்தில் கையெழுத்துப் பெற மத்திய புலனாய்வுத் துறை உயர் அதிகாரி திரு. லட்சுமி நாராயண் எடுத்த முயற்சி பற்றி நீதிபதி சர்க்காரியா கமிஷன் முன் மனுக் கொடுத்துள்ளார். அது மாத்திரமல்ல, ஜனதாஅரசால் நியமிக்கப்பட்ட ஷா கமிஷன் முன்பு அவசரகால நிலையும. மிசாச் சட்டமும், மற்றும பல்வேறு அதிகாரங்களும் எப்படித் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு. அரசியல் எதிரிகளும், மற்றவர்களும பழிவாங்கப்பட்டார்கள் என்பதைவிவரமாக உலகிற்கு உணர்த்துகிறது. எந்த மத்திய புலனாய்வுக்குழு சாட்சிகளை விசாரித்ததோ அந்த புலனாய்வுக் குழுவைச் சேர்ந்த போலீசாரின் தலைவராக இருந்த மத்திய புலனாய்வுக் குழுத் தலைவர் 'சென்' அவர்கள்மீது அதிகார துஷ்பிரயோகத்திற்காக கிரிமினல்வழக்குத் தொடரப்பட இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தயாரிக்கப்பட்ட சாட்சியங்களை வைத்துக் கொண்டு சாட்சிகளையும், புகார் மனுக்கொடுத்தோரையும் குறுக்கு விசாரணை செய்வதற்கு கழகத் தலைவர் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் நிராகரித்து, ஒருதலைப்பட்சமாக விசாரணை நடத்தப்பட்டு அளிக்கப்பட்டது தான் சர்க்காரியா விசாரணை அறிக்கை. இப்படி ஒருதலைப்பட்சமானவிசாரணையில் கழகம் கலந்துகொள்வதில்லை என்று நீதிபதி சர்க்காரியாவிடம் மனு கொடுத்துவிட்டு வாதாடி வெளியேறியவர் இன்றைக்கு மத்திய சட்ட அமைச்சராக இருக்கும் திரு சாந்திபூஷண் அவர்கள்தான்; அதுமாத்திரமல்லாமல் இன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் அவர்களும், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களும். ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் அவர்களும் மற்றும் பல தலைவர்களும் சர்க்காரியா விசாரணைக் குழு அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு நியமிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட பொய்ச் சாட்சிகளை வைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் அடிக்கடி வற்புறுத்தி வந்ததை எல்லாரும் நன்கு அறிவர். இப்படிப்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

# புருஷன்

## தென்னரசு



### 6

"நான் ஏன் சாகவேண்டும்? நான் கெட்டுப் போனவளா? புருஷனுக்குத் துரோகம் செய்தவளா? சாகக் கூடாது! செத்துவிட்டால் குருவம்மா நடத்தை கெட்டவள்தான் என்று முடிவாகிவிடும். யாருக்காக வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் என் அப்பாவுக்காக நான் வாழ்ந்தே தீர வேண்டும் அவர் கண்களை மூடுவதற்குள் என் மகள் தும்பைப் பூதான் என்று அவர் சொல்லிச் சாகவேண்டும்! குழந்தைதான் பிறக்கட்டுமே' மீனாட்சி மட்டும் கருணை வைத்து எனக்கு ஆண் குழந்தை கொடுக்கட்டும; மங்கம்மா மாதிரி அவனை விட்டே பெற்ற அப்பனை மார் தட்டி அழைக்கவைக்கிறேன்"

—குருவம்மாளின் நெஞ்சு கோதித்தது; சத்திரத்து மானேஜர் அவளுக்கு ஆறுதல் சொன்னார். வழக்கு மீண்டும் மன்றத்திற்கு வந்தது திண்ணை பிரம்தான், யாரும் அறியாத வேளையில் வந்து இச்சகம் பேசி குருவம்மாவைக் கெடுத்துவிட்டுப போய் விட்டான் என்பதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை என்று கூறி நீதிபதி ஜீவனும்சப் பணத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார். நிலைக் கண்ணாடி தெறித்துவிட்டால் முகம் ஒழுங்காகத் தெரியுமோ? விவாகரத்தும் நடந்துவிட்டது. ஆனால் கழுத்தில் கிடந்த தாலி? தெரிந்த ஊர் தெரியாத ஊர் எங்கே போனாலும் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பாக இருப்பது தாலிதானே; புலியிடமிருந்து மான் கூடத் தப்பிக்கலாம். ஆனால் தரித்திரத்தில் உழலும் தாலியில்லாத பெண் அவதூறுகளிலிருந்து தப்பிக்க முடியுமா? குருவம்மா அதற்காகவா தாலியை அகற்றுமல் இருந்தாள்? தாலி கட்டினவனுக்குத் துரோகம் செய்திருந்தால்தானே அவள் தாலியைக் கழற்றுவாள்! சட்டப்படி நீதிமன்றத்தில் தாலியை அவிழ்த்துப் போட்டுவிட்டு ஒரு நூலில் மஞ்சளைக் கோத்துக் கழுத்தில் கட்டிக் கொண்டுவிட்டாள்.

ஆறு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் சத்திரத்து மானேஜர் செண்பகஞ் சேர்வை வீட்டுக்குப் போய் அவரிடம் குருவம்மாவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கும் தகவலைச் சொன்னார். செண்பகம் நெருப்பாக இருந்தான்.

"நீங்கள் நினைக்கிறபடி இல்லை; உங்கள் மருமகன் ஒரு கடைந்தெடுத்த அயோக்கியன். அவன்தான் திட்டம் போட்டுக்காரியத்தை நடத்தியிருக்கிருன்" என்ருர் மானேஜர்.

"அவகெடக்கிறு! அவளுக்கும் எனக்கும் ஒண்ணுமில்லை; நீங்கயாரு? எதுக்காக இதிலே நீங்க தலையிடணும்?' செண்பகம் கேட்டான்.

"நானு? நான் மங்கம்மா சத்திரத்து மானேஜர். குருவம்மா எங்க சத்திரத்துல தான் கூட்டு வேலை பார்த்து வருகிறுள் சென்ற வாரம் தான் பிரசவத்துக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேம்; நேற்றுக் காலைதான் குழந்தை பிறந்ததாம்' என்ருர் மானேஜர்,

"குழந்தை பிறந்தா அதைக் குப்பைத் தொட்டியிலே தூக்கிப் போடச் சொல்லுங்க' என்று கடுகடுப்பாகப் பேசி அனுப்பிவிட்டான்.

அன்றிலிருந்து செண்பகத்திற்குத் தெருவில் நடக்கவே பயம்! வெட்கம்! யாராவது சந்தித்து என்ன பேத்தி பிறந்திருக்கிறளாமே' என்று கேட்டு விட்டால் என்ன செய்வது? அதற்காகவே செண்பகம் அதிகமாக வெளியில் நடமாட்டாமல் இருந்தான். ஆனால் ஒருநாள் அவன் பயந்தது நடந்து விட்டது.

செண்பகம்மீனாட்சியம்மன் கோயிலுக்குள்ளிருந்து அப்போதுதான் வெளியேறினன். அந்த நேரத்தில் சத்திரத்து மானேஜர் கோயிலுக்குள் நுழைந்தார்.

'அர்ச்சனை செய்து கொண்டு போகிறீர்களாக்கும்!" மானேஜரே பேச்சைத் தொடுத்தார்,

செண்பகம் காது கேட்காதவன் போல் நடந்தான்.

மானேஜர் விடுவதாயில்லை 'பெற்ற மகளை நீங்கள் நம்ப மறுத்துவிட்டீர்கள் தெய்வம் கண்ணை மூடிக்கொண்டா இருக்கும்' உங்கள் மாப்பிள்ளைபோ நீங்களோ இனிமேல் குருவம்மாவை அலட்சியம் செய்துவிட முடியாது; குருவம்மா உத்தமி என்பதற்குச் சாட்சி கிடைத்து விட்டது!' என்ருர் மானேஜர்.

செண்பகம் ஏளனமாகப் பார்த்தான்.

"ஆமாம்! குழந்தைக்கு வலது காலில் ஆறு விரல்கள். கழுத்தில் மச்சம்!'

இந்த இடத்தில் செண்பகம் நெற்றியைச் சுழித்தான், புருவத்தை நெறித்தான்; அவனை அறியாமலே அவன் கையில் இருந்த தேங்காய்—பழத்தட்டு தரையில் விழுந்தது;

'கணக்கப்பிள்ளைய்யா! உண்மையாகச் சொல்றீங்களா? ஆறு விரல்! மச்சம!' செண்பகம் கதறிக்கொண்டு சித்திரை வீதி வழியாக ஆஸ்பத்திரிக்கு ஓடினன்.

ஏன் செண்பகம் அப்படி ஓடினன்?

திண்ணைபிரத்திற்கும்வலது காலில் ஆறு விரல்கள்தான். அவன் கழுத்திலும் மச்சம் உண்டு! அதனால்தான் மகளிடம் மன்னிப்புக் கேட்க ஓடினன்.

ஃ ஃ ஃ

குருவம்மாவைச் செண்பகம் சேர்வை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டான் நம் மனதிலே கரும்புள்ளி ஏற்பட்டால் அதைப் பார்த்து உலகம் நகைக்குமே என்ற பயம் தோன்றுகிறது; நம் மனத்திலிருந்து அந்தப்புள்ளி அகன்றுவிட்டால் உலகத்தின் எந்தப் பேச்சும் நம்மைத் தீண்டுவதில்லை, ஆம்; நேற்றுவரை முக்காடு போட்டு அலைந்த செண்பகம் சேர்வை இன்று தலை நிமிர்ந்து நடந்தான்; மகளுக்குப் பழம் வாங்கி வந்தான்: 'பேத்திக்கு' பவுடர் வாங்கி வந்தான்

அதிலிருந்து குருவம்மா தகப்பனேடுதான் வாழ்ந்தாள் குழந்தை தவழ்ந்துவிளையாடத் தொடங்கும்வரை குருவம்மா எந்த வேலைக்கும் போவதில்லை அதன் பின்னர் அவள் சித்தாள் வேலைக்குப் போக ஆரம்பித்தாள் செண்பகம் வேலை பார்க்கும் இடத்தில்தான் குருவம்மா வேலை பார்ப்பாள் அவளைத் தனியாக விட செண்பகம் விரும்புவதில்லை ஏழைப்பொண்ணுகளின் அழகு மத்தவுங்களைச் சோதிக்குது; அவங்க வறுமை அவுங்களையே சோதிக்கிது. ஆனையாலே ஏழைப்பொண்ணுங்களுக்கு எப்போதும்பாதுகாப்பு இருக்கணும். என்ற எண்ணம் செண்பகத்தின் உள்ளத்தில் நன்ருகப் பதிந்துவிட்டது

குருவம்மாவின் மகள் சக்கு இப்போது புதுமலராகிவிட்டாள். வயது அவளுக்குப் பதினைந்து நடந்தது. அப்போதுதான் வைகை அணைக்குவேலைக்குப் புறப்பட்டான் செண்பகம்; மூவருமாக வைகை அணையில் குடியேறிவிட்டார்கள் அறிந்தவர்களுக்குத்தான் தெரியும் குருவம்மாவும், சக்குவும் தாயும் மகளும் என்று. அறியாதவர்கள் அவர்கள் இருவரையும் அக்காளும், தங்கையும் என்றுதான் நினைப்பார்கள், தெளிந்த நீரில் இணைந்து துள்ளும் பெரிய மீனும் சிறிய மீனும்போல் இருவரும்; அணையில் பார்ப்பவர்கள் கண்களை உறுத்திக் கொண்டிருந்தார்கள்.

அன்று செண்பகம் சேர்வைக்குக் கீழ்த்தளத்தில் பூச்சு வேலை. பிரதம எஞ்சினியர் அதிகாரிகள் புடைசூழ அந்தப் பக்கமாகவந்தார் சேர்வை. மீசையை ஒதுக்கிவிட்டுக் கொண்டு பூச்சுக் சரண்டியைத் தரையில் வைத்துவிட்டு அதிகாரிகளுக்கு மரியாதை செலுத்தினன்.

'இவர் ரொம்பக்கைராசிக்காரர். மொதல்லே இவரைத்தான்புடிச்சேன். அதுக்கப்புறம் தான் மளமளன்னு ஆளு கெடச்சது. இவரு வேலை ரொம்ப ஒசத்தி. பூச்சு வேலை ரொம்பப் பிரமாதம்!' மேஸ்திரி செந்தூர்ப் பாண்டியன் அதிகாரிகளிடம் அடுக்கிச் சொன்னன் செண்பகத்தின் மேனி சிலிர்த்தது. அதிகாரிகளுடன் ஒரு வடநாட்டுக் காரரும் வந்தார், அவர்

"தமிழாளுந்தானே இது?" என்ருர்.

"ஆமா, செண்பகம் சேர்வை இவரு பேரு" செந்தூரின் பதில்.

'அப்பஓஸ்திதான்! ஹோல் டமிலியன்சும் வொர்க்கிடல ஓஸ்திதான். நம்மல்க்கி அப்பவே தெரியும். துங்கபத்திரா டாம்லே பாத்திர்சு' என்ருர் சேட்.

எல்லோரும் போன பிறகு செந்தூர் செண்பகம் சேர்வையிடம் வந்தான்.

"என்ன சாப்பாட்டுக்கு போகல்லியா?" என்று செந்தூர் பரிவுடன் கேட்டான்.

"மேஸ்திரி தம்பி, எங்கே மறுபடியும் இந்தப் பக்கமா கிளமபிட்டிங்க?" செண்பகம் பதில் கேள்வியைப் போட்டான்.

"அத்தை சௌக்கியமா?'

செண்பகம் தவறி விழுந்தவனைப்போல்பேதலித்துவிட்டான் எப்போதுமில்லாமல் செந்தூர் முறை வைத்துப் பேசியதுதான் செண்பகத்திற்கு அருவருப்பாகத் தெரிந்தது.

"யாரைச் சேக்கிறீங்க தம்பி?" செண்பகம் விடவில்லை.

"நம்ம குருவம்மா அத்தையைத்தான் கேக்கிறேன்? ஏன் இந்தச் சந்தேகம்; செந்தூரின் பதிலில் குறும்பு விளையாடியது.

"ஓஹோ! ஏதோ இருக்கோம்; என்ன இருந்தாலும் கூலிப் பொழைப்புத்தானே தம்பி ஓடுறதுக்குப் பயந்து நிக்கிறவனைத்தைரியசாலின்னு சொல்றமாதிரி, சாகிறதுக்குப் பயந்து வாழுறதுனலே உலகம் எங்களையும் மனிதர்கள்னு சொல்லிக்கிட்டிருக்கு'

"ஒரு சேதி கேக்லாமுன்னு வந்தேன். நீங்க என்னடான்ன ஒரே விரக்திமயமா இருக்கீங்க. ஒங்களுக்கு என்ன கொறைச்ச? நீங்க ஒரு நாளைக்கி இப்ப நாலுரூபா சம்பாதிக்கிறீங்க; அதுக்கு மேலே உங்களுக்கு என்ன செலவு? பேத்திக்குக் கல்யாணம் பண்ணவேணுமேங்கிற கவலை இருக்கும்; இல்லையா?" செந்தூர் அடிப்படையைப் போட்டான்.

"என்ன மேஸ்திரித் தம்பிக்கி திடீர்னு எங்க குடும்பத்து மேலே அக்கறை வந்திட்டாபோல இருக்கு! எம் பேத்தி சக்கு கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரமாம்!.. ... எங்க வம்சத்திலே சரண்டி பிடிக்கிற உத்தியோகத்துக்கு நான்தான் கடைசி ஆளு! திருமலை நாயக்கரு காலத்திலேயிருந்துதான் நாங்க இந்த வேலை பார்க்கிறேம். எங்க வம்சம் இன்னும் தலையெடுக்கல்லே. என்னேட இந்த வேலைசரி! எங்க சக்குவெ எப்படியாவது ஒரு படிச்ச மாப்பிள்ளைக்கு கொடுக்கணும்கிறதுதான் என் ஆசை ஆனு எங்க குருவம்மா ஒத்தைக் காலிலே நிக்கிது படிச்ச மாப்பிளை வேணும் வேணும்னு கரைஞ்சுக்கிட்டிருக்குது. படிச்சவுங்கசிருகேப்பாங்க, படிச்ச செலவெக்கேப்பாங்கன்னு சொல்லுது' எல்லாருமேஅப்படியா கேட்டுருவாங்க? நான் மட்டும் சாகாமே இருந்தா எங்க சக்குவை என்மனசுபபடிதான்கல்யாணம்செஞ்சு கொடுபேன் எனக்கு அற்ப ஆயுசா இருந்து நான் போயிட்டேன்னு குருவம்மா இஷ்டப்படிதான் நடக்கும்' என்ருன் செண்பகம். அவன் பேச்சில் துளியும் கபடம் தொனிக்கவில்லை.

'எனக்கென்னமோ அத்தை சொல்றதுதான் சரின்னு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## அமெரிக்காவின் அரசியல் விளையாட்டு!

சோவியத்திற்கும் சீனவுக்கும் இடையே எல்லைத் தகராறின் காரணமாக வளர்ந்து வரும் பகைமையைப் பயன்படுத்திக்கொண்டு 'குழம்பிய குட்டையில்' மீன் பிடிக்கப் பார்க்கிறது அமெரிக்கா!

அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகரான 'சிபிக்னியூ பிரேசின்ஸ்கி' அண்மையில் சீனவுக்குச் சென்று முக்கிய தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

அப்போது சோவியத் தலைவர்கள் பற்றி அவரும் சீனத் தலைவர்களும் கேலி பேசி மகிழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

# ஒரிஜினல் உள்ளபடி



"இதைப் பெரிய டைப்பில் போடு"

"சரி சார்"

"கதா காலட்சேபம்......! உம் ஏனப்பா! 'க்ஷே என்று போடாமல் 'ட்சே போட்டுத் தொலைக்கிறாய்? ஒரிஜினலில் உள்ளபடிதானே உன்னைக் கம்போஸ் பண்ணச் சொன்னது?"

"............"

"அம்மன் 'பிளாக்கை இப்படி நடுவில் போடு. இந்த ஓரத்தில் அழகாய் 'பார்டர்' கட்டிச் செட்டியார் 'பிளாக்'கைப் போடு!"

"சரி சார்"

"உம், ஆமாம். என்ன புரியுதா? உன் சுத்தத் தமிழையெல்லாம் இதிலே காட்டாதே. ஒரிஜினலில் உள்ளபடி போடு!"

"............"

"செட்டியார் பொல்லாத கோபக்காரர். உன் செந்தமிழ் நடையைக் காட்டினால் நம்ப அச்சாபீஸ் கடையைக் கட்ட வேண்டியதுதான்."

"அதான் ஒரு தடவை சொன்னீங்களே சார்!— ஒரிஜினலில் உள்ளபடியே கம்போஸ் பண்றேன் சார்."

"உனக்குத்தான் மறதி ஜாஸ்திபாச்சே! உம் போ"

கம்பாசிட்டர் கந்தசாமி. வேதாந்தி பிரஸ் மானேஜர் வேலாயுதம் பிள்ளையிடம்தான் அச்சுக்கோத்த ஒரு 'நோட்டீஸ்' மாதிரித் தாளைக் காட்டியபோது நடந்த உரையாடல்!

கந்தசாமி, மானேஜரால் குற்றம் சொல்லப்பட்ட மாதிரித் தாளைக் கிழித்தெறிந்துவிட்டு, ஒரிஜினலை எடுத்து ஒருமுறை படித்தான்.

மணி மணியான எழுத்துக்கள். கந்தசாமியின் முகத்திலே ஒரு பரிதாபம் பிரதிபலித்தது.

"திரௌபதி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம்" விளம்பரத்தின் தலைப்பு இது. நிகழ்ச்சி நிரல் என்ற பகுதியில் 'ஸ்ரீ ஜகத் போகானந்த சுவாமிகள் பாஞ்சாலி சுயம்வரம் என்பது பற்றி உபன்யாசிப்பார்கள்" என்ற குறிப்பு இருந்தது. கந்தசாமி உதடுகளைக்கடித்துக்கொண்டான். ஒரு ஏளனம் பிதுங்கும் குட்டிச் சிரிப்பும், அதைத் தொடர்ந்து ஓர் ஆபாசமான பெருமூச்சும் வெளிக்கிளம்பின.

'நானும் இந்தப் பிரசுக்கு வந்து ஐந்து வருஷமாயிற்று. இந்த ஆபாசம் பிடித்த புராணக் குப்பைக்கு அச்சுக் கோப்பதை விடத் தூக்கு மாட்டிக் கொள்வது எவ்வளவோ மேல். அட தமிழ் எழுத்துக்களே! மலர்களை மகாகாளிக்குக் காவு கொடுக்கும் ஆட்டுக் குட்டிக்குப் போடும் மாலையாகவும் கட்டுகிறார்கள், மணமாலையாகவும் தொடுக்கிறார்கள். அதே போல் நீங்களும் தேன் சுவைக் கவிதைகளை — வாழ்வுக்கு வழி வகுக்கும் வசன நடைகளைப் புத்தக வடிவில் பின்னுகிறீர்கள். பொய்மை, பித்தலாட்டம், புனைசுருட்டு பொங்கி வழியும் புராணங்களும் உங்கள் சிருஷ்டியாகின்றன. ஆமாம் — மனிதர் கையில் அலைக்கழியும் மலர்க்கூட்டம் போலத்தான் இந்த எழுத்துக் கூட்டமும்!'

அவன் இதய அலைகள் ஓய்ந்தன. எதையோ கண்டுபிடித்து விட்டவன் போலக் கந்தசாமி கண்களை விசாலமாய்த் திறந்தான் மீண்டும் கையில் இருந்த 'ஒரிஜினலை' ஒருமுறை பார்த்தான். அதில் ஒவ்வோர் எழுத்தும் அவனை உற்றுப் பார்த்தன; அவன் உள்ளத்தில் ஊறுருவிப் பாய்ந்தன வாய்க்குள் உளறினான். "மகாகும்பாபிஷேகம்.. ம்.. மட உலகம்.. அலட்சியம் நிறைந்த வெறுப்பு அவன் முகத்தில் கோடுகளைக் கிழித்தது மீண்டும் தனக்குள் பேசிக் கொண்டான்!

"கொள்ளையடிக்கிற செட்டியார் செய்கிறானும் கும்பாபிஷேகம்!... கும்மாளம் போட்டு ஊரைக் குட்டிச்சுவராக்குகிறான் இந்தக் குருடர்களும் நம்புகிறார்கள் எனக்குத் தெரியுமே... இவன் ஏகாம்பரம் மனைவியைக் கற்பழித்த கதை! பெரியண்ணப் படையாச்சி பிராணாவஸ்தையில் இருக்கும் போது அவர் வீட்டுப் பணப்பெட்டியை அமுக்கியதில் தானே இவன் வீட்டுக்குப் 'பெரிய பண்ணை' பட்டம் கிடைத்தது! வேதாளபுரம், வெங்கடாசலபதி கிரீடத்தின் வைரங்களைப் பெயர்த்து விற்றதில்தானே விசாலமான வீடு கட்டினான்! இவற்றையெல்லாம் மறைக்கக் கும்பாபிஷேகம் செய்து விட்டால் போதுமா?... அடப்படுபாவி! நரகம் என்று ஒன்று இருந்தால் உன் நரம்புக்கு நரம்பு ஒரு நாகப்பாம்பை விட்டுக் கடிக்கச்சொல்லணுமேடா...! நீ கோயில் கட்ட வந்துவிட்டாய்—கோயில்! ராமநாதன் செட்டியாரே! இரு! இரு! ஒரு கை பார்க்கிறேன் உயிர் போனாலும் கவலையில்லை."

கந்தசாமியின் தலை கம்பீரமாய் நிமிர்ந்தது; எதிரே நிற்கும் படைத் தலைவனைப் பார்த்து 'எடு வாளை' என இறுமாந்து உரைக்கும் பண்டைய திராவிடப் போர் வீரனைப் போலக் கந்தசாமி நின்றான் அவனுக்கெதிரே ராமநாதன் செட்டியார் நிற்பதாக அவன் நினைவு!...பிறகு மளமளவென்று அச்சுக் கோக்க ஆரம்பித்தான். அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

'என்ன கம்பாசிட்டர் ஆச்சா?' என்று அதட்டினார் மானேஜர்.

அச்சுக்கோத்த மாதிரித் தாளை எடுத்து நீட்டினான் கந்தசாமி

அருமையான கட்டம். அழகான முறை. அந்த விளம்பரத்தாளின் அமைப்பே அலாதியாக இருந்தது

அச்சு நிலையத்து வாயிலில் கார் வந்து நின்றது. ராமநாதன் செட்டியார் இறங்கி வந்தார். "ஆச்சா?' என்றார்; ஆவல் பார்வையுடன். சில்க் சட்டையில் நிற்காமல் வழுக்கிக் கீழே விழுந்த வெண்பட்டு ஆடையை எடுத்துச் செட்டியாரின் தோளில் போட்டு விட்டான், பின்னால் வந்த வேலைக்காரன். அந்த அடிமையின் நிலைகண்ட கந்தசாமியின் தொண்டைக் குழி விம்மிற்று செட்டியார் வாயிலிருந்து எப்படி விமர்சனம் வரப்போகிறதோ என்று வாய பிளந்தபடி நின்றார் மானேஜர்

"பேஷ், ஜோராயிருக்கு; பத்தாயிரம் நோட்டீஸ் போடுங்க"

"எஸ்' மானேஜர் கூனன் போல் நின்று கொண்டிருந்தார்.

செட்டியார்வேலைக்காரனைப் பார்த்து "டேய்! ரத்தினம் இங்கேயே இருந்து நோட்டீசையெல்லாம் ..வாங்கி..."

'சுவத்திலே ஒட்டி விடுகிறேனுங்கோ."

"அட மடையா!... இது 'வால்போஸ்டர்' இல்லேடா. தெருவுக்குத் தெரு கொண்டு போய்க் கொடுடா; பத்தாயிரம் நோட்டீசும் சாயந்திரத்திற்குள்ளே செலவாகி விடணும்...ஆமாம்."

"உத்தரவு எஜமான்."

மானேஜர் தலை வணங்கிக் கும்பிட்டு வழியனுப்ப, ராமநாதன் செட்டியாரின் கார் பறந்தது.

"ஓய்! மிஷின்மேன்' பத்தாயிரம் 'நோட்டீஸ்' உடனே போடு. புளு மையில் போடு...ம்...ஓய்! கம்பாசிட்டர்!...நோட்டீசைத் தயாராக்கிக் கொடு...சீக்கிரம்"

மானேஜர் அவசரத்தால் குதித்துவிட்டுச் சாப்பாட்டுக்குப் புறப்பட்டார். கந்தசாமி மாதிரித்தாளுடன் உள்ளே சென்றான். அச்சுக் கோர்வையை எடுத்து இரும்புச் சட்டத்தில் பொருத்தினான். அப்போது அவன் கைகளில் சிறிய நடுக்கம் காணப்பட்டது. அவன் முதலில் கோத்திருந்த சில எழுத்துக்களைப் பிடுங்கினான். வேறு எழுத்துக்களைப் பொறுக்கி ...அந்தக் காலி இடங்களில் அடைத்தான்.

அச்சு இயந்திரத்தில் இரும்புச்சட்டம் ஏறிற்று. ஒன்று... இரண்டு... மூன்று. நூறு... ஆயிரம்... பத்தாயிரம... 'நோட்டீஸ்கள் அடித்து முடிந்தன. கந்தசாமியே அதை எடுத்துக் கட்டிக் கொடுத்தான். வேலைக்கார ரத்தினம் விளம்பரச் சுமையோடு நடையைக் கட்டினான். செட்டியார் உத்தரவுப்படி 'பத்தாயிரம் நோட்டீசை'யும் ஊரெங்கும் பரப்பி விட்டுத்தான் உட்கார்ந்தது அந்த அடிமை.

மறு நாள் கும்பாபிஷேகம் தாங்க முடியாத கூட்டம். செட்டியார் சர்வாலங்கார பூஷிதராய் தம் சகாக்களுடன் காரில் வந்து இறங்கினார். மற்றொரு காரில் ஒரு மங்கையர் கூட்டம் வந்து இறங்கிற்று. கூட்டத்தை ஒரு முறை பார்த்தார். "எல்லாம் என் பெருமை" என்று அவருடைய நிமிர்ந்த தலை சொல்லிற்று. ஓர் அலட்சியமான புன்னகை — வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டது! அகம்பாவம் தெறிக்கும் கண்கள் அகலமாகிக் கொண்டன!

கூட்டம் அவரைப் பார்த்து விட்டது. ஒரே ஆரவாரம்!...

'ஏய் காமநாதன் செட்டியார்...காமநாதன் செட்டியார்..." இப்படி ஒரு பேரிரைச்சல் கிளம்பி விட்டது. அநாவசியமான கைதட்டல். ஒரே நையாண்டிச் சிரிப்பு இடையே 'காமநாதன் செட்டியாரே! போகானந்த சுவாமிகள் எங்கே?' என்ற கேள்விகள்! பொருத்தமான பெயர்களப்பா...காமநாதன் போகானந்தர்..." இப்படி ஒரு விமர்சனம். மீண்டும் கைதட்டலும் சிரிப்பும். 'கண்ட பெண்களைக் கற்பழிக்கும் காமநாதன்செட்டியாருக்கு" என ஒற்றைக்குரல்.' இதைத் தொடர்ந்து 'ஜே ஜே' கோஷம்.

இதற்குள் ஒன்றும் புரியாத சிறுவர்கள் திரு திரு வென விழிக்கும் செட்டியாரைப் பணக்காரப் பைத்தியமென்றெண்ணி வீசிய சிறு சிறு கற்கள்;

எல்லாம் சேர்ந்து பெரிய குழப்பத்தில் — போலீசாரின் குண்டாந்தடிப் பிரயோகம் வரையில் — கொண்டு வந்து விட்டன, செட்டியாரின் முகத்தில் விளக்கெண்ணெய் வடிந்தது.

"கும்பாபிஷேகமும் வேண்டாம்; எழவும் வேண்டாம்; திருப்புடா காரை' என்று கர்ஜித்தார்.

கார்கள் கல் மாரியோடு திரும்பின. செட்டியார் தோற்றோடுகிறார் என்ற நினைப்பில் மீண்டும் பலத்த கர கோஷம்!

'லெக்னம்' தவறக்கூடாது என்ற சாஸ்திரிகளின் முடிவுப்படி செட்டியார் இல்லாமலேயே கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு யோகானந்த சுவாமிகள் உபன்யாசத்திற்காகச் செட்டியார் வீட்டில் வந்து இறங்கினார். செட்டியார் சோக உருவமாகச் சாய்ந்திருந்தார். யோகானந்த சுவாமியின் முகத்திலும் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"செட்டியார்வாள்... என்னை அவமானப்படுத்த எத்தனை நாள் எண்ணியிருந்தீர்?" என்று ஆத்திரத்தோடு அள்ளிக் கொட்டினார் சுவாமிகள்.

"என்ன சாமி ...புரியாமல் பேசுது!" என்றார் சாவதானமாகச் செட்டியார்.

"இதோ பாரும்."

யோகானந்த சுவாமிகள் விளம்பரத்தாளை எடுத்துச் செட்டியாரிடம் வீசினார்...

"திரௌபதி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம்' செட்டியார் படித்தார்.

"இதற்கென்ன சுவாமி?"

"முழுதும் படியும் ஐயா"

செட்டியார் படிக்க ஆரம்பித்தார்.

'ஸ்ரீ ஜகத் போகானந்த சுவாமிகள் பாஞ்சாலி விபசாரம் என்பது பற்றி உடன் யாசிப்பார்கள்.. அடடா... யோகானந்தர் போகானந்தர் ஆகியிருக்கு! பாஞ்சாலி சுயம்வரம் — பாஞ்சாலி விபச்சாரம் என்று மாறியிருக்கு. உபன்யாசிப்பார்கள் என்பது உடன் யாசிப்பார்கள் என்று இருக்கு! . இது எந்த அயோக்கியன் செய்த வேலை?' செட்டியார் சிம்மம்போல் உறுமினார் யோகானந்த சுவாமிகளுக்கு வாய் பேசாமலேயே கையும் காலும் ஆடின. அப்போது எதையோ புதிதாகக் கண்டுபிடித்த கணக்குப் பிள்ளை "இதோ பாருங்க, இதோ பாருங்க" என்று 'நோட்டீசைக் காட்டினார்.

"இப்படிக்கு அம்பாள் ஊழியர் காமநாதன் செட்டியார்" என்ற கொட்டை எழுத்துக்கள் அவை! ராமநாதன் செட்டியார் எழுந்து அகோர நர்த்தனத்தை ஆரம்பித்து விட்டார். பல்லைப் படபடவென்று கடித்துக்கொண்டார்.

"அச்சாபீசுக்காரன் உண்மையைத்தான் போட்டிருக்கிறான்" என்று (சொல்லவில்லை) தனக்குள் எண்ணிக் கொண்டார் கணக்கப் பிள்ளை.

"ஏய் டிரைவர் காரை எடு' — செட்டியார் உத்தரவு.

வேதாந்தி பிரசின் முன்னே கார் நின்றது மானேஜரும் யானைகள் புகுந்த வெண்கலக் கடையாயிற்று

"ஏய் கம்பாசிட்டர்! டேய்" என்று ரௌத்திராகாரமாக அழைத்தார் மானேஜர் வேலாயுதம் பிள்ளை.

கம்பாசிட்டர் கந்தசாமி வந்து நின்றான்.

ஓங்கி ஓர் அறை — கந்தசாமி மானேஜரால் தாக்கப்பட்டான்; அடிபட்ட கந்தசாமி அழவுமில்லை; ஆத்திரப்படவுமில்லை; சிரித்தான.

'என்னடா சிரிக்கிறாய்... தடிப்பயலே?' மானேஜர் நோட்டீசை அவன் முகத்தில் எறிந்தார்.

"ஒன்றுமில்லை சார் ஒரிஜினலில் உள்ளபடியே அச்சுக் கோத்திருக்கிறேன்."

'ஒரிஜினலா' எதுடா ஒரிஜினல்! ஒரிஜினலில் பாஞ்சாலி விபச்சாரம் என்றுதான போட்டிருக்கோ?'

"ஆமாம்... இதற்கு உண்மையான ஒரிஜினல் பாரதம். இந்தக் கையெழுத்து நோட்டீஸ் அல்ல!... பாரத ஒரிஜினலில் ஐவருக்குத் தேவியாகவும் ஆறாவது புருஷனாகக் கர்ணன்மேல் ஆசை கொண்டவளாகவும்தான் பஞ்சாலி சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். அந்த லட்சணப்படிப் பாஞ்சாலி சுயம்வரத்தைவிடப் பாஞ்சாலி விபச்சாரம் என்று போடுவதுதான் எனக்குச் சரியான ஒரிஜினலாகத் தெரிந்தது?

அது மட்டுமல்ல ..இந்தச் செட்டியார் காமக் காண்டாமிருகம்! அதுதான் அவர் வாழ்க்கை வரலாற்றின் ஒரிஜினல். அதன்படி காமநாதன் செட்டியார் என்று 'கம்போஸ்' செய்தேன். உபன்யாசத்திற்கு வரும் சாமியார் ஒரு போகப்பூனை. அவன் பகலில் பரமபக்தன். இரவில் பரமபாதகன் இந்த உண்மை ஒரிஜினலை நான் மாற்ற விரும்பாமல் போகானந்த சுவாமிகள் என்று போட்டேன். இது குற்றமா?" கந்தசாமி கலகலவென்று சிரித்தான்.

"ஆ" மானேஜர் வாயைப் பிளந்தார்.

"பொறும், நீர் தானே சொன்னீர் ஒரிஜினலில் உள்ளபடி போடு!" என்று. கந்தசாமி மீண்டும் சிரித்துக் கொண்டே வேதாந்தி பிரசை விட்டு வெளியேறினான்.

செட்டியாரும் மானேஜரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.



கருணாநிதி

# புருஷன்...

(5—ம் பக்கத் தொடர்ச்சி)

தோணுது. எதுக்கும் நீங்க அவசரப்படாதிங்க; நான் செத்தா போயிட்டேன்; என்ன தேவையோ அதை நான் செய்யிறேன்; நான் கிழிக்கிற கோட்டை இங்கே யாரும் தாண்டமாட்டாங்க; அடுத்த வாரத்திலே இருந்து உங்களுக்கு மேல் தளத்திலே வேலே போடச் சொல்லிட்டேன். சம்பளம் ரெண்டு ரூபா அதிகம், அணைக்கட்டு முடிஞ்சதும் எங்க மேலாளு எனக்குக் கலியாணம் பண்ணி வக்கிறேன், கையிலே ரெண்டாயிரம் தருவேன்னு சொல்லிட்டாரு. சொன்னச் செய்யிறவரு அவரு இதுக்கு மேலே உங்ககிட்டே அதிகம் சொல்லத் தேவையில்லே; பிறகு உங்க இஷ்டம்!" செந்தூர் வார்த்தைகளைப் பூப்போல உதிர்த்தான்.

"எல்லாம் அதுங்க விதிப்படிதான் நடக்கும் தம்பி, காச்சல்காரனுக்கு மருந்தைச் சொல்லலாம், அவனுக்காக நாமே மருந்தைச் சாப்பிட முடியுமா தம்பி! அநுமாதிரித்தான் எல்லாம்!' என்று இறுக்கமாகப் பதில் சொன்னாள் செண்பகம்.

செந்தூர் நகர்ந்தான். "தெய்வம் எப்போதும் ஏழைகளுக்கு எதிரிதான்! இல்லாட்டா ஏன் ஏழைப் பெண்ணுகளே அது அழகாகப் படைக்கணும்?'— செண்பகம் முணங்கிக் கொண்டே வீட்டுக்கு நடந்தான்

வெள்ளி ரதம்போல் பின்னிலவு ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. அணைக் கட்டுத் தொழிலாளிகளின் குடிசைகள், அள்ளித் தெளித்த மல்லிகைப் பூக்களைப்போல் கும்பல் கும்பலாக அமைந்து கிடந்தன. நெளியும் நீண்ட புழுக்களைப்போல் சின்னஞ்சிறு நீரோடைகள் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு சல சலத்துக் கொண்டிருந்தன. தவழப் பழகும் மழலையைப்போல் மெல்லிய பூங்காற்று வீசுவதும், சற்றுக் களைபுறுவதுமாக இருந்தது. உனக்கு மட்டும்தான் படைக்கத் தெரியுமோ? இதே மனித சக்தி என்னே, ஒரு அரக்கனைப் படைத்திருக்கிறது பார்த்தாயா' என்று படைப்புத் தெய்வத்தை வம்புக்கிழுக்கும் தோரணையில் அணைக்கட்டு கம்பீரமாக நெஞ்சுயர்த்தி நின்றது.

தொழிலாளர் குழுவிலிருந்து ஒவ்வொரு நாள் இரவும் யாராவது ஒருவா அணையைச் சுற்றிக் கண்காணித்து விட்டு வரவேண்டும் என்று ஒரு விதி வகுக்கப்பட்டிருந்தது. விஷமிகள் யாரும் அணைக்கட்டுக்கு வெடி வைத்துவிடக் கூடாது என்பதற்காகவே இப்படி ஒரு காவல் முறையை அணைக்கட்டு நிர்வாகிகள் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அன்றைய இரவுக் காவல் செந்தூரானுடையது. பாதி ராத்திரிக்குமேல் அவன கைவிளக்குடன் அணைக்கட்டுப் பக்கமாக நடந்தான். நடக்கும்போது கடந்த வாரம் செண்பகஞ் சோலை "நான் உயிரோடிருந்தால் என் பேத்தியைப் படித்த மாப்பிள்ளைக்குத்தான் கொடுப்பேன்; நான் செத்துப் போய்ட்டா குருவம்மா விருப்பப்படிதான் நடக்கும்' என்று சிரணிக்காத உணவுப்போல் அவன் நெஞ்சில் வந்து முட்டி நின்றது.

"செண்பகம் உயிரோடிருந்தால் சக்கு எனக்குக் கிடைக்க மாட்டாள்; எவனாவது படித்தவன் கைக்குத்தான் அவள் போவாள்" என்று செந்தூரான் தனக்குள்ளேயே பேசிக் கொண்டு நடந்தான்.

அவன் அணைக்கட்டு அருகில் போய் விட்டான்: அப்போது அவன் காதுக்கு ஒரு சிற்றொலி மிதந்து வந்தது. வெகு தூரத்தில் ஒரு சினிமாக் காட்சி நடந்தால் எப்படிப் பேச்சுக்குரல் கேட்குமோ அப்படிக் கேட்டது. செந்தூரான் காது கொடுத்தான்.

அந்த உரையாடல்;

"யாரு சுடலேயா அது?'

"ஆமா பொன்னையா அண்ணனுக்கும். சும்மா இப்படி ஆத்தங்கரைப் பக்கம் வந்திட்டுப் போகலாம்னு வந்தேன். ஊருலே இருந்து கடுதாசி வந்திச்சு, அதாலே கொஞ்சம் மனம் சொணங்கிப் போச்சு. நீ எங்கே இப்படி இவ்வம்பிட்டே?"

"உன்னேகாலேயிலேயிருந்து தேடிக்கிட்டிருந்தேன். நீ அகப்படலே! மனம்வேகுது சுடலே. உங்கிட்ட சொல்லி ஆத்திக்கிடலாம்னுதான் அலஞ்சேன். செந்தூரான் கொடுமையைக் கேட்டாயா?'

"என்ன செய்திட்டான்? சொல்லு! புதுசா ஒன்னுமிருக்காதுன்னு நினைக்கிறேன். ஒன்னே டிஸ்மிஸ் பண்ணிட்டானு?'

"இல்லே சுடலே! எனக்குச் சம்பளம் இரண்டு ரூபா. ஆனு கணக்கிலே நாலு ரூபான்னு போட்டிருக்கானும் ரசீதிலே என்னே ஏமாத்தி கையெழுத்து வாங்கி வாரான் தெனைக்கும் என் பணம் ரெண்டு ரூபாயை அவன் ஏப்பம்விட்டுக்கிட்டு இருக்கான். முன்னமே இப்படிதான் ஒரு தகராறு! எனக்குக் கோபம் வந்ததேபார்க்கலாம். ஒரு இடி இடிச்சேன்! அதான் அவன் தங்கப்பல்லுக் கட்டியிருக்கான்' இப்ப என்ன பண்றது அவனே?

"இதெல்லாம் மேஸ்திரிகளுக்குச் சாதாரணமான வேலே பொன்னையா. நீயும் நானும் அவனே என்ன செஞ்சிடமுடியும்? எதித்துப்பேசினு வேலே இல்லே போங்க என்பான் அவன் மேலாளும் ஒத்துப்பாடுவாரு! என்ன செய்யிறது?'

"அவனைத் தொலைக்கணும்; இல்லே நம்ம தொலேபணும். இப்படி எத்தனை காலந்துக்கு ஓழச்சிஓழச்சியொரிலே இருக்கறவனுக்குப் போடுறது! நான் முடிவுக்கு வந்திட்டேன். நீமட்டும் சரி சொன்னு போதும்."

'பொன்னையா, எதிரியை ஒழிச்சுக் கட்டுறது பாவமல்லே கண்ண பரமாத்மா செய்யலே? ஆனு ஒன்னு' குறி தவறப்படாது தவறிட்டா எதிரி நம்மை மன்னிக்க மாட்டான். அதுவும் செந்தூரான் கண்ணாடிவிரியன் மாதிரி ஆசாமி!'

'எல்லாஞ்சரி சுடலே நான் சொல்றதைக் கேளேன். அணையிலே தண்ணி போறதாலே இந்த வாரம் பூரா வேலே இல்லே' உனக்கும்தான் தெரியுமே! திங்கக்கிழமை தான் வேலேயாம்! அன்னைக்கி மேல் தளத்தைப் பார்க்கறதுக்காக அதிகாலேயிலே செந்தூரான் மேலே போவான்!... ஸ்......ஸ்......ஸ்...கிட்டவா!... ...?"

"பொன்னையா! யோசனே என்னமோ சரியானதுதான்!"

——இந்த உரையாடலே நின்று மறைவிலிருந்து பூரணமாகக் கேட்டு விட்டான் செந்தூரான். ஆனால் அவர்களை அவன் கையும் களவுமாகப் பிடிக்கவில்லே. ஏன்?

பொன்னையாவும் சுடலேயும் திங்கட்கிழமையை எதிர் பார்த்திருந்தார்கள். அவர்களைவிட செந்தூரான்தான் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தான்.

திங்கட்கிழமை! கிழக்கு வெளுத்து விட்டது. தொழிலாளர் அணிகள் வேலேகளைத் தொடங்கி விட்டன

குருவம்மா, சேர்வைக்கு கடுங்காப்பி போட்டுக்கொடுத்து அனுப்பி வைத்தாள்.

"சக்கு. அம்மாவோட சண்டை போட்டுக்காதேம்மா குருவம்மா உனக்கும்தான் சொல்லி வைக்கிறேன். நீயும் புள்ளேமேலே சுடுக்குன்னு பேசாதே' என்று வழக்கம் போல் படிப்பினை சொல்லி விட்டு சேர்வை அணைக்குப் புறப்பட்டான்.

செண்பகம் போய்க் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் செந்தூரான் அந்த வழியாக வந்தான்.

"தாத்தனு வேலேக்குப் போயிட்டாரா,

"போய்ட்டாங்களே' நீங்க போவில்லேயா?' — குருவம்மா வந்தமாதிரி இல்லே. செந்தூரானேடு காரணத்தோடு பேசுவாள்.

'ஆண்டிபட்டியிலே கொஞ்சம் வேலே இருக்குது. அதுக்காகப் போறேன். மத்தியானச் சாப்பாட்டுக்குத் திரும்பிடுவேன் ஏதாவது வாங்கி வரட்டுமா?"

"ஒன்னும் வேணும்! கம்புலி புத்தூரிலே என்ன படம் ஓடுது?"

"அ.....து ஞாபகமில்லே; விசாரிச்சுக்கிட்டு வாரேன்." செந்தூர் போய்விட்டான். அவன் போய் ஒரு மணி நேரம் தான் இருக்கும் அப்போது மணி சரியாக பத்து, அணையே அதிரும்படி, தொழிலாளர் குடும்பங்கள் அல்லோகோலப்படும்படி அபாயச் சங்கு ஒலித்தது. யுத்தக் காலத்தில் நாட்டு மக்கள் உயிர்களைப் பிடித்துக்கொண்டு சிதறுண்டு ஓடியதைப் போல அணைக்கட்டு வாசிகள் தலைதெறிக்க மூலே முடுக்கெல்லாம் ஓடினர்கள்.

பாவம்; அவர்களுக்கா வந்தது அபாயம்? வாழ்க்கையில் நிம்மதி என்பதையே அறியாதவர்களாய், தடைகளையும் துன்பங்களையும் தகர்த்தெறிவதையே வேலேயாக்கிக் கொண்டிருந்த குருவம்மாவுக்கல்லவா வந்தது அந்த விபத்து'

சிதறுண்டு திரண்டு ஓடிய கூட்டமொன்று குருவம்மாவின் குடிசையைமுற்றுகையிட்டது; ஆனல் குருவம்மாவிடம் அந்தத் தகவலேத் தெரிவிப்பதற்கு யாருக்கும் தெம்பு இல்லே.

குருவம்மா ஒரு ஜோதி என்றல் அந்த ஜோதி இத்தனை காலமும் எந்த விளக்கில் இருந்து ஒளி தந்து கொண்டிருந்ததோ அந்த விளக்கு உடைந்து நொறுங்கி விட்டது.

குருவம்மா ஒரு வைரம் என்றல், அந்த வைரம் இது நாள் வரை எந்த இரும்புப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டதோ அந்தப் பெட்டி தவறி விழுந்து நொறுங்கிவிட்டது

குருவம்மா ஒரு கொடி என்றல், அந்தக் கொடிக்கு ஆதாரமாக நின்ற நெடுஞ்சுவர் இடிந்துவிட்டது. ஆம்; செண்பகஞ்சேர்வை அணையின் மேல்தளத்திற்கு ஏறும்போது மூங்கில் சாரம் சரிந்து கீழே விழுந்து இறந்துவிட்டான

இத்தனை ஆண்டுக்காலமாக குருவம்மா அவதூறுகளையும் பழிச் சொற்களையும் தாங்கிக்கொண்டு வாழ்ந்தாள்; இனிமேல் அவள் குடும்பத்தையே தாங்க வேண்டும்;

(தொடரும்)

## அமெரிக்காவை மிரட்டும் பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு நீண்ட காலமாகவே போர்க் கருவிகளை அளித்து வந்துள்ளது அமெரிக்கா இப்போது அந்த 'உதவி'யை நிறுத்திக்கொண்டது

தொடர்ந்து தனக்குப் போர்க் கருவிகளைத் தந்து உதவாவிட்டால் 'இராணுவக் கூட்டிலிருந்து, விலகி கூட்டுச் சேரா நாடுகளின் அணியில் சேர்ந்துவிடப் போவதாக இப்போது அமெரிக்காவை மிரட்டி வருகிறது பாகிஸ்தான்

பாகிஸ்தானின் இந்த 'மிரட்டல்' வெறும் வாயளவிலானதுதான் என்பது உலகறிந்த உண்மை. விலகப் போவதாகக் கூறிக் கொண்டே இராணுவக் கூட்டு நாடுகளின் நடவடிக்கைகளில் தீவிரப் பங்கேற்பது பாகிஸ்தானின் வழக்கமான செயலாகும்.


இந்தியாவினுல் தனக்கேற்படப் போகும் 'ஆபத்தைத்' தடுக்கவேதான் ஆயுத உதவி கோருவதாக பாகிஸ்தான் ஒரு சாதுபிள்ளை' போல் கோரியுள்ளது இந்தியாவினுல் ஆபத்து ஏற்படும் என்பது பாகிஸ்தானின் கற்பனைக் கதை என்பதையும் உலகம் நன்ருக அறிந்துள்ளது

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41. ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O 104-A ராமகிருஷ்ண மடம்சாலே, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!



மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலே ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினல், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறேம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு. (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
PHOTOGRAPHERS (ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

# 'தினமணி'யும் புறநானூறும்!

[புலவர் கோ. அண்ணாமலை எம். ஏ.]

போரிலே வெற்றி பெற்றான் என்பதற்காக ஒரு மன்னனை ஒருபுலவன் பாராட்டினான், உடனே தினமணி. அந்தப் புலவன் போர்வெறியைத் தூண்டுகிறான் பார் என்ற குற்றச்சாட்டோடு கோபப்படுகிறது! அரசர்களுக்கு இயல்பாகவே பொங்கியெழுந்த போர்த்தீயைப் பாராட்டுரை என்னும் விறகு செருகி கிளர்ந்தெழவும் செய்தனர் என்று, போரைத் தவிர்க்கவும் ஒற்றுமை யேற்படுத்தவும் அஞ்சாது தூது சென்ற 'அவ்வை, கோவூர்கிழார் போன்ற புலவர்களையும் மறந்துவிட்டு தினமணி ஏன் குறையே காண வேண்டுமென்று துடிக்கிறது? தமிழர்களிடையே 'கிளர்ந்தெழுகின்ற' தமிழ் உணர்வுதான் காரணமோ?

சேரன் செங்குட்டுவன் வடபுலத்து மன்னர்களையெல்லாம் வென்றான்; இமயத்திலே தன் கொடியை நாட்டினான்!

சோழன் கரிகால் பெருவளத்தானும் அப்படியே!

இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும், கடல்கடந்த நாடுகளை வென்றடிமைப்படுத்தியவர்கள்.

ஈழத்தை வென்றவர்கள்,

பர்மாவை வென்றவர்கள்.

கீழ்த்திசை நாடுகளை வென்ற தமிழக வேந்தர்கள் நிறைய இருக்கிறார்கள் அவர்களெல்லாம், தினமணியின் நினைவுக்கு வரவில்லை! தமிழ்வேந்தர்கள் தங்களுக்குள் போரிட்டது மட்டும் நினைவில் வருகிறது. ஏன்?

பங்காளிகளாகப் போர்க்களத்திலே சந்தித்துக் கொண்டவர்கள்; தந்தையும் மைந்தர்களுமாக எதிர்ப்பட்டவர்கள்; அண்ணனும் தம்பியுமானும் எதிர் எதிரே நின்றவர்கள், பெண்ணைப் பெற்றவனும், பெண்ணைத் தனக்காகப் பெற விரும்பியவனும் என்ற முறையில் போர்க்களத்திலே எதிர்ப்பட்டவர்கள்— என்றிப்படியெல்லாம் புறநானூற்றிலே பலர் காணப்பட்டாலும், அவர்களைப் பற்றிய கண்டனத்தையும், அதே புறநானூற்றுப் பாடல்களிலே நாம காண்கிற காரணத்தாலேதான், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழர் நாகரிகத்தையும். உலகு கொண்டாடிக் கொண்டிருக்கிறது. தமிழ்ப் பண்பாடு, தமிழர் நாகரிகம் என்கிற கோபுரக் கலசத்தினை என்னதான் எரிச்சல் என்கிற காற்று. மன அரிப்பு என்கிற சூறாவளி சுழன்றடித்தாலும் தினமணி வெளியிடுவது போன்ற கட்டுரைக் குப்பைகள் எட்டிட முடியாது!

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆராயாமல் கோவலனைக் கொன்றான்! எனவே. அவன் அறமுறை தவறியவன் என்று சட்டென்று முடிவுக்கு வருவது அரைவேக்காட்டுத்தனமாகும்! தான் நீதி தவறிவிட்டான் என்பதை அறிந்ததுடன்.

"யானோ அரசன்?
யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்
புலங் காவல் என்முதல்
பிழைத்தது—கெடுகஎன்
ஆயுள்!

—என்று கூறி உயிர்விடுகிறான். அதனை இளங்கோவடிகளே

"வல்வினை வளைத்த
கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச்
செங்கோலாக்கியது"

—என்று பாராட்டுகிறார்!

வளைந்துவிட்ட அவனது செங்கோலை, அவன் உடலைவிட்டுப் பிரிந்துவிட்ட உயிர் சென்று நிமிர்த்திவிட்டது என்று பாராட்டுகிறார் அப்படி உயிர் கொடுத்தும் நேர்மையை, நீதியை, தாம் கொண்ட கொள்கையைக் கடைசிவரை நிலைநிறுத்திய நெடுஞ்செழியர்கள் நிறைய அந்த நாளில், இருந்திருக்கின்றனர்!

அந்தணன் வீட்டுக் கதவைத் தட்டியது தவறாக உணர்ந்து கொள்ளப்பட்டுவிட்ட காரணத்தால், தன் கையையே அந்த அந்தணர் தம் முறையீட்டுக்கிணங்க வெட்டியெறிந்து, பொன்னால் ஆன கையைப் பொருத்திக் கொண்டான் பாண்டியன்!

காசிக்குப்போன அந்தணர் திரும்பிவிட்டார் என்பது தெரியாமல் எவனோ அந்தணர் மனைவியிடம் பேசுகிறானே—நள்ளிரவில் என்று, தன் காவல் நெறிழுக்குக் களங்கம் வரலாகாதே என்ற கவலையில் மன்னன் கதவைத் தட்ட அதுகேட்ட அந்தணர் கதவைத் தட்டுவோன் யாரென, மனைவி மீதும் சந்தேகப்பட, எல்லோருடைய வீட்டுக் கதவுகளையும் தட்டிவிட்டு மன்னர் அரண்மனைக்கு வர விடியலில் அந்த அந்தணர்கள் அனைவருமே வந்து, இரவில் எங்கள் வீட்டுக் கதவுகளை யாரோ தட்டுகிறார்கள்! தட்டுபவர் கை வெட்டப்பட வேண்டும் என்று முறையீட்டையும் தீர்ப்பையும் அவர்களே வழங்கிவிட—தன் கையை வெட்டியெறிந்துவிட்டுப் பொற்கையைப் பொருத்திக் கொண்டவனை நல்லோர் எல்லோரும் போற்றுவர். தினமணிபோல குறை சொல்லவேண்டும் — எந்தத் தமிழனும் களங்கப்படுத்தப்படவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களானால் பொற்கைப் பாண்டியனைக்கூட இரவிலே போய்—கணவன் காசிக்குப் போயிருக்கும்போது—அந்த அந்தணன் மனைவியைப் பெண்டாள நினைத்த சண்டாளன் என்று கூட எழுதிக் காட்டலாம்! கதையை ஒரு கட்டத்திலே நிறுத்திவிட்டால் போகிறது! ஆனால், சங்கஇலக்கியம் அந்தப் பொற்கைப் பாண்டியனை,

"ஆடுமழை தடக்கை
அறுத்து முறைதிருத்த
பொற்கை நறுந்தார்
புனைதேர்ப் பாண்டியன்"

—என்று போற்றிப் புகழ்கிறது!

ஒழுங்கானவைகளாகவும் தெளிவானவை என்றும் தீர்க்கப்பட்டு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட செய்திகளைக்கூட, விவரம் புரியாமல் தினமணி குழப்பப் பார்க்கிறது.

கொடுமை எது?

வீரம் எது? — என்பதிலே தினமணிக் கட்டுரையாளர்க்கு ஏனோ குழப்பம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி கிழார் மருதனார் பாராட்டுகிறார். போரிலே அவன் பெற்ற வெற்றிக்காக! எப்படிப் பாராட்டுகிறார்?

"அச்சத்தைத் தரும் கடல் நீரினை காற்றினால் மோதப்பட்ட கப்பல் கிழித்துக் கொண்டு செல்வதைப்போல பரந்துகிடக்கும் எதிரிகளாகிய படையைக் கிழித்துக்கொண்டு உன் யானை உட்செல்ல, அது சென்றதினால் ஏற்பட்ட இடைவெளியில், ஒளிவீசுகின்ற—இலைவடிவமான வேலினையேந்தி பகையரசனோடு போர் செய்து அவன் முரசினைக் கைப்பற்றினாய்! எதிரி தன் தலையில் அணிந்திருந்த மணிமுடியே அடுப்பாகவும். அவன் குருதியே உலை நீரராகவும், எதிரியின் தோள் முதலாகத் துண்டிக்கப்பட்ட கரம் துடுப்பாகவும், அவர்தம் நிணமும் கொழுப்பும் சமைக்கப்படு பொருளாகவும் ஆக. நீ ஒரு மாபெரும் வேள்வியே நடத்திக் காட்டினாய்;' என்று பாராட்டுகிறார்!

இது அவரது பாராட்டில் பாதியே ஆகும்! மீதியை தினமணி ஏனோ விழுங்கிவிட்டது. இந்தப் பாதியை வைத்துக்கொண்டு, பார்த்தீர்களா எப்படிப்பட்ட 'கொடுமை'யை இந்த அரசன் செய்திருக்கிறான். இவனைப் போய் ஒரு புலவன் பாராட்டினால் மேலும் போர் வெறியைத் தூண்டிவிடாதா என்று தினமணி கேள்வி எழுப்புகிறது!

இங்கே ஒன்றைத் தெளிவு படுத்த விரும்புகிறோம். போர்க்களத்தில் நடைபெறுகின்ற செயல்களைக் குறித்து, போரிலே ஈடுபடுகின்ற இரண்டு தரப்பாருமே குறைபட்டுக் கொண்டதாகப் புறநானூற்றிலே செய்தி கிடையாது!

அதாவது, போர்க்களத்திலே தோற்றுப் போகவும், துன்புறவும், உயிர்விடவுமான நிலைமைகளுக்கு ஆளாகிறவர்கள் யாரும் தன்னைப் போர்க்களத்தில் வைத்து எதிரி கொடுமைப் படுத்திவிட்டான் என்று குறைபட்டுக் கொண்டதாக தமிழகத்தில்—புறநானூற்றில் செய்தி கிடையாது.

உயிரே போனாலும் அதனை வீரமரணம் என்று எண்ணி மகிழ்வதும புண்பட்டால் அதனையே விழுப்புண் என்று பெருமைப்படுவதும்தான் தமிழினத்தின் கொள்கையாகவும் வாழ்க்கையாவும இருந்திருக்கிறதே தவிர. போர்க்களத்திலே என்னை எத்தனை கொடுமைகளுக்கு ஆளாக்கிவிட்டான் என் எதிரி என்று எந்தத் தமிழனும் சொன்ன வரலாறு — புறநானூற்றிலே இல்லை!

கொடுமை என்று "தினமணி இனம்" எதனை வர்ணிக்கப் பார்க்கிறதோ. அதனைத்தான் தமிழினம், 'விழுப்புண்' என்றும, வீரமரணம் என்றும் பாராட்டிப் போற்றியது

ஆதாரத்துக்கு வேறெங்கும் போகவேண்டாம். தினமணி 'கொடுமை' செய்தான் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று எந்தப் புறநானூற்றுப் பாடலை எடுத்துக் காட்டுகிறதோ அதே பாட்டின் பிற்பகுதியை நாம் எடுத்துக் காட்டுகிறோம்.

"......வாய்வாள் வேந்தே
நோற்றோர் மன்ற நின்
பகைவர் நின்னொடு
மாற்றா ரென்னும்
பெயர் பெற்று
ஆற்றா ராயினும் மாண்டு
வாழ்வோரே"

—என்கிறது தினமணி எடுத்துக்கொண்ட பாடலின் முடிவான வரிகள்!

என்ன பொருள் அந்த வரிகளுக்கு?

கூர்மையான வாளினையுடைய வேந்தே! "நின்னுடைய பகைவர்கள், நின்னுடைய மாற்றார் என்னும் பெயர் பெற்று நின்னோடு போர் செய்தற்கு ஆற்றாதவர்கள். ஆனாலும். நிச்சயம் அவர்கள் நல்ல நோன்பு நோற்றவர்களே ஆவார்கள்! தினமணி மொழியில் சொன்னால் 'தவம்' செய்தவர்களே ஆவார்கள்! ஏனென்றால், அவர்கள் மாண்ட பின்னும் — உன்னோடு போரிட்டுமாண்ட பெருமையோடு என்றும் வாழ்வோரே ஆவார்கள்!' என்பது அந்த வரிகளின் கருத்தாகும்!

ஆக. போர்க்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் இன்னல் பெருமைக்குரியது, புகழுக்குரியது என்றுதான் கருதப்பட்டது தமிழர்களால்!

(தொடரும்)

'நம் நாடு' இதழில் கலைஞர் அவர்கள் 'இன்னுமா இன அழிப்பு வேலை? உணர்வு படைத்தோர், உடன் செயல் படுக!' என்னும் தலைப்பில் உடன் பிறப்புக்களுக்கு எழுதிய கடிதத்தின் எதிரொலியே இந்தக் கட்டுரை.

இதேபோன்று, இலக்கிய அணியினரும், இன உணர்வுகொண்ட புலவர் பெருமக்களும் எழுதி அனுப்பிய வண்ணமிருக்கின்றனர். தொடர்ந்து அக்கட்டுரைகளெல்லாம் 'நம் நாடு' இதழில் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தொலைபேசி: கடை: 33213 இல்லம்: 31922
நாம் நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை, மதுரை 11.
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பெ. தேவசகாயம்
கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
12, அழகர்கோவில் சாலை, 72, டவுன் ஹால் ரோடு, மதுரை.

## பொதுக்குழுத் தீர்மானம்] [4-ம் பக்கத் தொடர்ச்சி

பட்ட சூழ்நிலைகளில் நடைபெற்றுள்ள விசாரணையில் தரப்பட்டுள்ள அறிக்கைகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கழகம் மத்திய அரசை வற்புறுத்தி பலமுறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. ஆனாலும் பொய்ப் புகார் கொடுத்த எம். ஜி. ஆர். தலைமையிலான மாநில அரசுக்கே மேற்படி அறிக்கையை அனுப்பி மேல் நடவடிக்கை எடுக்கச் சொல்லி இருப்பது சட்டவிரோதமானது மட்டுமல்ல, நியாயத்திற்கும் விரோதமானதாகும். அந்த அறிக்கையை வைத்துக் கொண்டு மாநில அரசு "வழக்குப் போடுவேன் என்று பிரச்சாரம் செய்வதும் வழக்கு போட முனைவதும்; நீதிக்கும் நேர்மைக்கும் அப்பாற்பட்ட சுயநலமான அரசியல் பழி வாங்கும் செயலாகும். அதுமாத்திரமல்லாமல் ஜனநாயக ரீதியில் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட கழக கறுப்புக்கொடி நிகழ்ச்சியைத் திரித்து அச்சுறுத்தலுக்கும், ஆசை வார்த்தைகளுக்கும் ஆட்படுபவர்களை அரசாங்கச் சார்பு சாட்சியாக ஆக்கிக் கொண்டு அதன் அடிப்படையில் கொலை முயற்சி போன்ற கொடும் குற்றச்சாட்டுகளைக் கொண்ட பொய் வழக்குகளைப் போட்டிருப்பது அரசியல் நாகரிகமற்ற செயலாகும். மேலும் முன்னாள் மத்திய அரசால் அரசியல் காரணங்களுக்காகத் தலைவர்கள்மீது தொடரப்பட்டுள்ள பொய் வழக்குகளையும், ஷா கமிஷன் அறிக்கை. முன்னாள் அரசு வழக்குப் போடுவதற்கு கையாண்ட முறைகள்பற்றி வெளியிட்டுள்ள தகவல் அடிப்படையில் தொடர்ந்து நடத்துவது நியாயமற்ற செயலாகும்

எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் விரோதம் காரணமாகவும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து பழிவாங்கும் நோக்கோடு எம். ஜி. ஆரால் அரசியல் தலைவர்கள், முன்னணியினர் மீது தொடரப்பட்டுள்ள எல்லாப் பொய் வழக்குகளிலும் விசாரணைக்குக் குந்தகம் ஏற்படுத்துகின்ற விதத்தில் பொறுப்பற்ற முறையில் மாநில முதல்வரும் மற்ற அமைச்சர்களும் பேசி வருவது கண்டிக்கத்தக்க ஒன்றாகும். மேலும் எந்தவிதக் காரணமும் இன்றி தனக்கு வேண்டிய ஆட்களைக் கொண்டு எப்படியும் கழகத் தலைவர்களுக்கும், முன்னணியினருக்கும் தண்டனை அளித்தே தீரவேண்டும் என்ற தீய நோக்கத்தோடு தேவையில்லாமல் தனிக் கோர்ட்டுக்களை நியமித்திருப்பது விரும்பத்தகாத செயலாகும். எனவே இந்தப் பொதுக்குழு கழகத்தலைவர்கள் மீதும், முன்னணியினர் மீதும் தொடரப்பட்டுள்ள எல்லா வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும் என்றும், சர்க்காரியா விசாரணைக்குழு அளித்த அறிக்கை புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும், முன்னாள் மத்திய அரசால் தொடரப்பட்டுள்ள மற்ற வழக்குகளையும் மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இத்தகைய நீதியற்ற பழி வாங்கும் முறையைக் கண்டிக்கவும், இத் தீர்மானத்தின் கருத்தைப் பொதுமக்களுக்கு விரிவாக விளக்கவும் வருகின்ற ஜூலை 1 2, சனி, ஞாயிறு நாட்களில் நாடெங்கும் பொய் வழக்குக் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்துவது என இப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

# 'யாரைத்தான் நம்புவதோ.....'

அடுத்த மாதம் (ஜூலை) முதலமைச்சர் எம். ஜி ஆர். அமெரிக்கா சென்று இரண்டு வார காலத்திற்குச் சிகிச்சை செய்து கொள்ளப்போவது உறுதியாகிவிட்டது.

வயதாகிவிட்டதன் காரணமாக மங்கிவரும் கண்பார்வையைச் சரிசெய்து கொள்வதும், 'முகத்தில் ஏற்பட்டுள்ள சுருக்கங்களை' 'பிளாஸ்டிக் சர்ஜரி' மூலம் மீண்டும் 'மழமழபபாக்கிக்' கொள்வதும் தான் அவர் செய்து கொள்ளப் போகும் சிகிச்சை என்று பரவலாகப் பேசப்படுகிறது.

(சினிமாப்படம் எடுப்பதற்காகவே அமெரிக்கா செல்வதாகவும் கூறப்படுகிறது. எதற்காகச் சென்றாலும் அதைப் பற்றி நமக்கு அக்கறையில்லை)

தாம் அமெரிக்கா சென்று திரும்பும்வரை யாரை தற்காலிக (Acting) முதலமைச்சராகப் போடுவது என்ற பிரச்சினை 'ஆக்டரான' (Actor) எம். ஜி. ஆருக்கு ஒரு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் அமைச்சரான (பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் விடாப் பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கும்) எஸ். டி. சோமசுந்தரம் அந்த இரண்டு வார காலத்திற்குத் தற்காலிக முதலமைச்சராக நியமிக்கப்படுவார் எனச் சிலர் எதிர்பார்க்கிறார்கள்.

அமைச்சரவையில் அவர் 'ஐந்தாவது' இடத்தைப் பெற்றவர்என்றபோதும் அ.தி.மு.க. வினரிடையே அதிக செல்வாக்கு அவருக்கிருக்கிறது! எனவே அவரைத் தற்காலிக முதலமைச்சர் ஆக்குவதால் தமது பதவிக்கே ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோஎன எம். ஜி ஆர். எண்ணிப் பயப்படுகிறாராம.

யாரையாவது தற்காலிக முதலமைச்சராக்கப் போய் அவரே 'நிரந்தர' முதலமைச்சர் ஆக 'அண்டர் கிரவுண்ட்' வேலைகளைச் செய்துவிடுவாரோ என்று எம். ஜி. ஆர். அஞ்சுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

தன்னைச்சுற்றியுள்ள சகா'க்கள் அனைவரும் காட்டிக் கொடுப்பதிலும், காலை வாரிவிடுவதிலும், இருட்டில் இரகசிய பேரம் நடத்துவதிலும் 'அதி சமர்த்தர்கள்' என்பது எம் ஜி. ஆருக்குத் தெரியாதா?

'ஆக்டிங்' முதலமைச்சராகும் வாய்ப்பு இன்னொரு அமைச்சருக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.—'தடித்த' வார்த்தைகளில் மோகம் கொண்டிருக்கும் அந்த அமைச்சரைச் சிலர் 'சவால்விடும் சண்டியர்' 'மந்திரக்கோல் மைனர்' என்றெல்லாம் வர்ணிப்பதுண்டு.

ஒரு காலத்தில் எம். ஜி ஆரின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் தான் அவர்!

ஆனால் இப்போது நிலைமை அப்படி அல்ல—

முதலமைச்சராக வேண்டும் என்ற அவருடைய வாழ்க்கைக் குறிக்கோள் — நெடுங்

**பழனி. சித்தார்த்தன்**

கனவு —எம். ஜி ஆருக்குத் தெரிந்துவிட்டது! அ.தி.மு க. வின் 'இரண்டாவது எம். ஜி. ஆர்.' என வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளும் அவர், தான் முதலமைச்சராவதற்கு வேண்டி எந்த 'விலை'யையும் தர முன்வருவார்; எந்த 'இருட்டறை' ஒப்பந்தங்களுக்கும் உடன்படுவார்; புரூட்டசாக மாறி எதிர்பாராத நேரத்தில் முதுகில்குத்துவார்—இப்படிப்பட்ட உண்மைகள் எல்லாம் எம். ஜி. ஆருக்குத் தெரியும்; பாம்பின்கால் பாம்பறியாதா? மேலும்—

தமிழகத்தைப் பொறுத்த எத்தனையோ பிரச்சினைகளிலும் — அகில இந்தியப் பிரச்சினைகளிலும் — எம். ஜி ஆரை கலந்தாலோசிக்காமலேயே எதையாவது 'சவால்' பாணியில் உளறி வைத்துவிட்டு— நெருக்கடி முற்றும்போது— பொறுப்பை எம். ஜி. ஆர். மீது தள்ளிவிட்டு நைசாக நழுவிக் கொண்டிருக்கிறார் அவர்.

தனக்கு இக்கட்டை விளைவிக்கும்படியாகப் பேசியும், செயல்பட்டும் வரும் அவரை நம்பி முதலமைச்சர் பதவியைத் தற்காலிகம் என்றாலும் தருவாரா எம். ஜி. ஆர்.?

ஏதாவது ஒரு சிக்கலில் தன்னை மாட்டிவிட்டு 'வேடிக்கை' பார்க்க நினைக்கும் ஆபத்தான அந்த மனிதரின் ராஜதந்திரம் எம். ஜி. ஆருக்குச் சிறிது சிறிதாகப் புலப்பட்டு வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக —அவரைத் தற்காலிக முதலமைச்சராக்குவதில் இருக்கும் இன்னொரு பெரிய தடை என்னவென்றால் —

"மதுவிலக்கை முழு மூச்சோடு செயல்படுத்தியே தீருவேன்...' என்று எம் ஜி. ஆர் நாள்தோறும் சூளுரைத்துக் கொண்டிருக்க—

மைனரோ, தனது குடிப் பழக்கத்தை விட்டு விட்டதாகத் தெரியவில்லை. ஏன், சில பொதுக்கூட்டங்களுக்கும் கூட அவர் 'மயக்க நிலையில் இரட்டை மனிதராகவே' வருகிறார் என்பது ஊரறிந்த உண்மை!

'கிறங்கிய' நிலையில் சவால் விடுவதையும், 'தெளிந்த' நிலையில் 'நான் அப்படிச் சொல்லவில்லை...' எனக் கூறி மண்தவ்வுவதையும் வாடிக்கையாகக் கொண்ட ஒருவரை நம்பி எப்படி முதலமைச்சர் பதவியை ஒப்படைப்பது என எம். ஜி. ஆர். அவரை 'சிபார்சு' செய்ய வரும் ஆட்களிடம் கேட்டு எரிந்து விடுகிறாராம்.

இதற்கிடையில்—

'தற்காலிக முதலமைச்சர் நானே' என பகிரங்கமாகக் கூற ஆரம்பித்து விட்டாராம் பண்ணுருட்டியார்- கட்சியைப் பிளவுபடுத்துவதிலும், 'ஐந்தாம் படை' வேலை பார்ப்பதிலும், கவிழ்க்கும் சதிகளிலும் பண்ணுருட்டியார் கைதேர்ந்தவர் என்பதை தமிழக அரசியல் சரித்திரம் என்றோ தெளிவுபடுத்தி விட்டது.

அவரைத் தற்காலிக முதலமைச்சராக்குவது என்பது 'யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதற்கு' ஒப்பாகும் என நினைக்கிறார் எம் ஜி. ஆர்.

தொழிலாளர் பிரச்சினைகள், விவசாயிகள் பிரச்சினைகள் ஏற்படுத்தியுள்ள 'தலைவலி'கள் போதாதென்று இப் பிரச்சினை வேறு புதிய தலைவலியைத் தோற்றுவித்துள்ளது எம். ஜி. ஆருக்கு!

நம்பிக்கைக்குரிய யாருமே கண்களில் படாவிட்டால்— (அப்படி யாராவது இருந்தால் தானே)—தான் அமெரிக்கா சென்று திரும்பும் வரை—தன்னிடமுள்ள துறைகளை யாருமே தொடக் கூடாது என்று ஆணை இடுவதைத் தவிர வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை-எம். ஜி. ஆருக்கு!

முதலமைச்சர் பதவி என்பது தன் திறமைக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டது என்பதை எம். ஜி. ஆர். இப்போது உணர்கிறாராம்! ★

## நஞ்சும் மருந்தாகும்!

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பார்கள். காரணம், உயிர் போக்கும் நஞ்சை அது தன்னகத்தே கொண்டிருப்பது தான்.

அந்த நஞ்சையும் மருந்தாக்கி மனிதரின் நோய்களைத் தீர்க்க முயன்று வருகிறது சோவியத்!

உஸ்பெக் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த — மருத்துவத்துறைக் கழகத்தின் உயிரியல், இராசாயன ஆய்வுக்கூட ஊழியர்கள், பலவகைப் பாம்புகள் குறித்தும், அவற்றின் நஞ்சின் உள்ளடக்கத்தைப் பற்றியும் ஆராய்ந்து வருகின்றனர்.

பாம்பின் நஞ்சிலுள்ள சில பகுதிகளை முக்கியமான உயிரியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்பயன்படுத்தலாம் என மாஸ்கோவின் மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள்.

## இராஜ்நாராயணனின் அரசியல் கூத்து!

மத்திய நலத்துறை அமைச்சரான இராஜ்நாராயணனுக்குப் பெயர்களை மாற்றுவதில் மிகுந்த விருப்பம் உண்டு. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை குடும்ப நலத் திட்டமாக மாற்றினார்; 'வெல்லிங்கடன்' மருத்துவ நிலையத்தின் பெயரை 'ராம்மனோகர் லோகியா' மருத்துவ நிலையம் என்று மாற்றினார்.

அந்த மருத்துவ விடுதிக்கு அண்மையில் சென்றபோது ஆபத்தான நிலையில் கொண்டு வரப்படும் நோயாளிகளை உடனே கவனிக்கும் பகுதியைப் பார்த்ததும் அவருக்குக் கோபம் வந்து விட்டது. காரணம், அங்கே 'அவசரம்' (Emergency) என்று எழுதப்பட்டிருந்தது. உடனே பெயரை மாற்றும்படி சொன்னார் அமைச்சர். 'வேறுஎன்னபெயர் வைப்பது?' என்று அதிகாரி கேட்டபோது அதி புத்திசாலியான அமைச்சர் பதிலே சொல்லவில்லை,

# பாரதிதாசனைப் பழித்துரைக்கும் துணிவு எப்படி வந்தது?

தமிழ்மொழி, தமிழ் இனம் தமிழ் இலக்கியம், தமிழ்ப்பண்பாடு என்றெல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பவர்களை மட்டந்தட்ட வேண்டும் என்பதே இன்று தமிழினப் பகைவர்களின் திட்டமிட்ட பணியாக உள்ளது.

னமணிக் கும்பல் புறநானூற்று ஆராய்ச்சி என்னும் பேரால் ஓர் ஆளைப்பிடித்து தமிழ்ப்பண்பாட்டைக் களங்கப்படுத்தும் வகையில் கட்டுரை எழுதச் செய்தது. அதற்குத்தமிழினத்தின் கடும் கண்டனம் எழுந்ததும் நிறுத்திக்கொண்டுவிட்டது.

ஆட்டொழுது குமுதத்திருக்கூட்டத்திற்கு ஓர் ஆள்கிடைத்திருக்கிறார் உண்மைத் தமிழர்கள் அனைவராலும் புரட்சிக் கவிஞர் என்றும், பாவேந்தர் என்றும் போற்றப்படும்பாரதிதாசனையே இழிவு படுத்தும் வகையில் அந்த ஆள் குமுதத்தில் எதிநியுள்ளார்,

**புரட்சிக்கவிஞர் பாரதிதாசன ஓர் ஆபாசக்கவிஞராம்!**

மக்கை பிடித்துக்கொண்டு படிக்கவேண்டிய ஏடுகளில் முதலிடம் வகிக்கும் 'குமுதம்' தான் கூறுகிறது இப்படி

பக்கத்துக்குப் பக்கம் எழுத்திலும், படத்திலும் ஆபாசத்தை அள்ளிக்கொட்டி தமிழ்ப்பண்பாட்டையே குலைத்துக் கொண்டிருக்கும் அந்த ஏடுதான் புரட்சிக் கவிஞரின் கவிதையிலே ஆபாசத்தைக் கண்டுபிடித்து விட்டதாகக் குதிக்கிறது!

குமுதத்திடம் கூலிபெற்றுக் கொண்டு, அதன் விருப்பத் திற்கேற்ப எழுதத் துணிந்த 'தமிழ் மகனை எந்தப் பட்டியலில் சேர்ப்பது?

குடும்பங்களில் வைத்து வெளிப்படையாகப் படிக்கவே முடியாத—வயது வந்தவர்கள் மட்டுமே படிக்கக் கூடிய ஆபாசக் களஞ்சியமாகத் திகழும் 'குமுதம்' ஏட்டுக்கு பாவேந்தர் பாரதிதாசன் ஆபாசக் கவிஞராகத் தெரிகிறார்

பாரப்பு முறை மீறி மணிப் பிரவாள நடையில் கண்டதையெல்லாம் கிறுக்கி, 'இதுதான் கவிதை' என்று கூறும் ஒருபிறவி புரட்சிக் கவிஞரை 'ஆபாசக் கவிஞர்' எனச் சாற்றுவதற்கு ஆதாரம் தேடிக்கொண்டிருக்கிறது

இந்த வேடிக்கையை என்னென்று சொல்வது!

பாவேந்தரைத் திறனாய்வு செய்வது என்றால் அதற்குச் சில தகுதிகள் வேண்டும்.

தெருவிலே திரியும் பைத்தியக்காரன் உளறுவதெல்லாம் திறனாய்வு ஆகிவிட முடியுமா?


குமுதத்திலே இடம்பெற்று விட்டதனாலேயே குப்பைகளெல்லாம் கருத்துக் களஞ்சியமாகி விடுமா?

— தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஊட்டிய தமிழ்மொழி உணர்வும், இன உணர்வும் அவர்கள் காலத்துக்குப் பின் பட்டுப் போய் விடும்; அதன் பிறகு நமது ஆதிக்க வேட்டையைத் தட்டிக் கேட்க ஆள் இல்லாமற் போய் விடும் என்று நம்பிக் கொண்டிருந்த தமிழினப் பகைவர்கள். இன்று கலைஞர் தலைமையில் திரண்டு நிற்கும் உண்மைத் தமிழ்ப் பட்டாளத்தைக் கண்டு மிரண்டு அலறித் துடிக்கின்றனர். அதன் எதிரொலிதான். தினமணிக் கட்டுரைகளும். குமுதத்தின் குறும்புத்தனமான கூற்றும்.

நீறு பூத்த நெருப்பாக இன்னமும் இருந்து வரும் இன உணர்வும் மொழிப் பற்றும் கொழுந்துவிட்டெரிய வேண்டுமானால் தினமணியும் குமுதமும் தொடர்ந்து இதே திருவிளையாடலை நடத்திக் கொண்டிருக்கலாம்.

புறநானூற்றுக் காலத் தமிழ் பண்பாட்டைக் கேலி செய்யவும். புரட்சிக் கவிஞரை ஆபாசக் கவிஞர் என்று அகிலத்துக்கு எடுத்துக் காட்ட ஆதாரம் தேடவும் அந்த ஏடுகளுக்குத் துணிவு வந்தது எப்படி?

இன உணர்வோ மொழியுணர்வோ இன்றிச் சோற்றாலடித்த பிண்டங்களாக இன்



னமும தமிழினத்தவரிலே ஒரு சிலர் இருந்து வருவதால்தான் தமிழினப் பகைவர்களுக்கு இந்தத் துணிவு வந்திருக்கிறது.

தமிழினத்துடன் நேரடியாக மோதி வென்றவர்கள் வரலாற்றில் இல்லை. ஒரு தமிழனையே விலைக்கு வாங்கி, தமிழன் கையாலேயே மற்றொரு தமிழன் கண்ணில் குத்தச் செய்யும் சாணக்கியத்தனம்தான் வென்றிருக்கிறது!

அதே சாணக்கிய வேலைதான் தொடர்ந்து தமிழகத்தில் நடைபெற்று வருகிறது.

விலைபோகும் தமிழன்—வீபீடணத் தமிழன்—தமிழ் நாட்டில் எப்போதுமே கிடைத்துக் கொண்டுதானிருக்கிறான். அவனைக் கொண்டு தமிழினத்தை இழிந்துரைக்க முடிந்தால் அழித்துவிட மாற்றான் முயற்சியும் இராமாயண கால முதல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

புரட்சிக் கவிஞர் ஓர் ஆபாசக் கவிஞா என்றால் பக்தி இலக்கியங்களிலேயே 'ஆபாசத்தை அள்ளி வழங்கியிருக்கிற கம்பன், அருணகிரிநாதர் போன்றவர்களையெல்லாம் என்ன சொல்லி அழைப்பது'

கம்பனின் பக்திக் காவியத்தில் உள்ள ஆபாச வர்ணனைகளை எடுத்துக்காட்டத்தானே பேரறிஞர் அண்ணா அவர்கள் கம்பரசம் என்ற நூலையே எழுதினார்!

குமுதத்தின் கூற்றுப்படி பார்த்தால் அருணகிரிநாதர் மட்டுமல்ல, திருப்பாவை பாடிய ஆண்டாள் கூட ஆபாசக் கவிஞர்தான்!

இந்த உண்மையையும் எடுத்து விளக்க குமுதத்துக்கு துணிவுண்டா?

பக்தியின் பேரால். பாடப்பட்ட இலக்கியங்களில் இல்லாத ஆபாசத்தையா பாரதிதாசன் பாடலில் கண்டு விட்டது குமுதம்!

அவ்வளவு தொலைவுக்குக் கூடப் போக வேண்டாம்; குமுதம் இதழையே எடுத்துக் கொள்வோம். அதுவும் பாவேந்தரின் படத்தையும் அவரது கவிதை வரிகள் சிலவற்றையும் வெளியிட்டு இது ஆபாசமில்லையா? என்று கேட்கும் அதே குமுதம் (22-6-78) இதழைப் பாருங்கள் அதில் 68 ஆம் பக்கத்தில் படத்துடன் கூடிய துணுக்கு இது—

"உனக்கும் உன் மனைவிக்கும் சண்டை என்றுயே'

"ஆமாம்! நேற்று இரவ 10-20 மணிக்குத்தான் உடன்படுக்கை ஏற்பட்டது!'

இதற்கு என்ன பெயர்? குமுதத்தின் இலக்கணப்படி இதில் ஆபாசமில்லை!

இன்னொரு பக்கத்தில் 'இது படுக்கைக்குப் போகுமுன் செய்துகொள்கிற ஆயத்தம்போலிருக்கிறது என்று எழுதி ஒரு பெண் சோம்பல் முறிக்கும் படத்தையும் வெளியிட்டிருக்கிறதே அதில் எந்த ஆபாசமும் வெளிப்படவில்லையா?

ஆனால் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய காதல்கவிதையின் இரண்டொரு வரிகளை வைத்து அவரையே ஆபாசக் கவிஞர் ஆக்க முனைந்திருக்கிறார். பாவேந்தரின் கவிதைகளைப் படித்தே தன்னையும் கவிஞர் ஆக்கிக்கொண்ட அந்த விபீஷணர்!

பாரதிதாசன் பாடல் வரிகளை எடுத்துக்காட்டி இது ஆபாசமில்லையா என்று கேட்கும் அந்தப் புதுக்கவிஞரைப்' பற்றி நமக்குக் கவலையில்லை. அவரைப்பற்றி நமக்கு நன்றாக தெரியும் அந்த நாகா வா மனிதரின் கூற்றை யாரும்பொருட்படுத்த தேவையில்லை அவர் கூற்றுக்குப் பதில் எழுதுவதும் வீண் வேலை. நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புவதெல்லாம் தினமணி குமுதம் திருக்கூட்டத்தின் உள் நோக்கம் என்ன என்பதை உணர்ச்சியுள்ள உண்மைத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான்.

விபீஷணர்கள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கிறார்கள் என்பதால் அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு தமிழினத்தையே சவாலுக்கு அழைக்க முனைந்துள்ளது தமிழ்ப் பகைவர் கூட்டம் இதனைப் புரிந்துகொள்வதுதான் நமக்கு முக்கியமே தவிர பாரதிதாசன் கவிதைகளில் ஆபாசம் இருக்கிறதா இல்லையா என்ற ஆராய்ச்சியல்ல!

எனவே அந்த 'நகாவாக் கவிஞரைப்பற்றியோ அவர் கூற்றில் எந்த அளவுக்கு உண்மையிருக்கிறது என்பது பற்றியோ நாம் ஆராயத் தேவையில்லை.

எய்வன் இருக்க அம்பை நோவானேன்?

பாரதிதாசனை ஆபாசக்கவிஞர் என்று இன்று கூறுகிறது. 'குமுதம், இதனை எதிர்த்துக் கேட்க ஆளில்லை யென்றால், அடுத்து திருக்குறளில் உள்ள 'காமத்துப் பாலை' எடுத்துக் காட்டி 'திருவள்ளுவரும் ஓர் ஆபாசக் கவிஞரே' என்று கூறவும் தயங்காது குமுதம்.

எனவே, குமுதமும், குமுத எழுத்தாளர்களும் தொடங்கியுள்ள இந்தத் தமிழின விரோதச் செயலை முளையிலேயே கிள்ளி எறிதல்கூட, சொரணையுள்ள தமிழர்களின் கடமையாகும்.

## முப்பெரும் காப்பியமாக முப்பெருந் தலைவர்கள்

### இலக்கிய அணித் தலைவர் முடியரசன் வாழ்துரை

இலக்கிய அணியின் தலைவர், கவியரசு முடியரசன் அவர்கள், இலக்கிய அணியின் சார்பில் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு —

மதுரை மாநகரில் 18—6—78-இல் நடைபெற்ற தி. மு. க. பொதுக் குழுவில் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைவராகவும், பேராசிரியர் அன்பழகனார் பொதுச் செயலாளராகவும் சாதிக் அவர்கள் பொருளாளராகவும் ஒருமுகமாகத் தேர்வு செய்யப்பெற்றமை குறித்து. இலக்கிய அணியின் சார்பில் உளங்கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மூவரும் ஐம்பெருங் காப்பியம் போல் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிறேன். பெயரளவில் ஐம்பெருங் கப்பியங்கள் என்று மொழியப்படினும் போனவை போக நம்மிடம் எஞ்சியிருப்பன மூன்று காவியங்களே. அவ்வாறே கழகத் தலைவர்களில் போனவர் போக நம்மிடம் இருப்பவரும் மூவரே.

மேலும் பலகலையிலும் வல்லவனாகிய சீவகன் வரலாறு கூறுவது சீவக சிந்தாமணி. அதுபோல் பல துறைகளிலும் வல்லவராகி வாகை சூடி வருபவர் கலைஞர்.

தவறு செய்தோன் பாண்டியன் நெடுஞ்செழியனாயினும் அஞ்சாது வழக்காடி வென்ற கண்ணகியின் வரலாறே சிலப்பதிகாரம். அதுபோல அஞ்சாது உண்மைக்காகப் போராடுபவர் பேராசிரியர். அமைதியின் வடிவமாக இருந்து பொதுப்பணி புரிந்த மணிமேகலையின் வரலாறுதான் மணிமேகலை. அதுபோல ஆரவாரமின்றி அமைதியாகப் பணிபுரிபவர் சாதிக் அவர்கள். ஆதலின் காப்பியங்களைப்போல வாழ்க என வாழ்த்துவது பொருந்தும்.

இம்மூவரையும் வாழ்த்துவதுடன் அமையாது, துறை தோறும் துறைதோறும் இம்மூவரும் எடுக்கும் முயற்சி ஒவ்வொன்றும் வெற்றி பெறத் தமிழ், தமிழர் நாகரிகம் சிறக்கவேண்டுமென்று எண்ணும் தமிழர் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகிறேன்.

அன்பன்
முடியரசன்

## கலைஞர் கடிதம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கழக முன்னணியினர் முத்தான தமிழெடுத்து இனமுரசு ஒலித்தனர் மதுரையம்பதியில்!

அந்தக் கூட்டத்தில் தான் மதுரை மாநகராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் பட்டியலை நான் அறிவித்தேன்.

நமது தோழமைக்கட்சி வேட்பாளர்களையும் கழக வேட்பாளர்களையும் ஒன்ருகவே கருதி அவர்களின் வெற்றிக்காகக் களங்கமற்ற உள்ளத்தோடு உழைப்பவன் தான் கழகத்தின் உடன் பிறப்பு என்பதை நாடறியும்!

அந்த வரலாற்றை மாற்ருமல் — பணிகளை வகைப்படுத்திக்கொண்டு அதிகார ஆர்ப்பாட்டம் கண்டு அஞ்சாமல் — ஆரவாரத்துக்கு இடமின்றி — கண்துஞ்சாமல் கடமையாற்றிஞல் மதுரையில் வெற்றிக் கொடி நாட்டலாம். இன்றே உன்னை அதற்குத் தயார் படுத்திக் கொள்க! இது என் அன்பு வேண்டுகோள்!

அன்புள்ள

மு.க.



## கழக ஆட்சிமன்ற குழு

மதுரையில் நடந்த கழகப் பொதுக் குழுவில் கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் வருமாறு;

அன்பில் தர்மலிங்கம்
மு. கண்ணப்பன்
வீரபாண்டி ஆறுமுகம் M.L C.
துரைமுருகன் M.L.A
எஸ்.எஸ். தென்னரசு
ஆர்.டி. சீத்தாபதி

❧ ❧ ❧

## தணிக்கைக் குழு

கழகத் தணிக்கைக்குழு உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கோவை
மு. இராமநாதன்
இரகுமான்கான் M.L.A.
சுப. தங்கவேலன்

# கழகத்தின் காவலர்கள்!



திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவராகக் கலைஞர் அவர்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது பொதுக்குழு

அதேபோல். பொதுச்செயலாளராகப் பேராசிரியர் அவர்களும், பொருளாளராக சாதிக் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள்.

கலைஞர் அவர்கள் மூன்ருவது முறையாகக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்கள்.

பேராசிரியர் அவர்கள் இரண்டாவது முறையாகப் பொதுச்செயலாளர் பொறுப்பையும், சாதிக் அவர்கள் இரண்டாவது முறையாகப் பொருளாளர் பொறுப்பையும் ஏற்றுள்ளார்கள்.

மதுரையில் கூடிய பொதுக் குழுவில் ஏ. வி பி ஆசைத்தம்பி எம் பி அவர்கள் ஆணையாளராக இருந்து தலைமைக் கழகத் தேர்தலை நடத்தி வைத்தார்.



திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்: 'அன்பகம்' 1/104-B அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 44100